எவர்சில்வர் பிளாஸ்ரிக்,
அலுமினிய பொருள்களை
வாங்குவதற்கு யாழ். நகரில்
சிறந்த ஸ்தாபனம்:
ஞானம்
விற்பனைக் கூடம்
66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

அழகுசாதன அன்பளிப்பு
பொருள்களையும்
கைக்கடிகாரங்களையும்
வாங்குவதற்கு
சிறந்த ஸ்தாபனம்
ஞானம்
விற்பனைக் கூடம்
66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 13 திங்கட்கிழமை (27 – 03 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 120

# பொருளாதார, மீன்பிடி தடைகள் நீக்குவது பற்றி தீவிர பரிசீலனை!

## புதுடில்லியில் சந்திரிகா அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 27

வடபகுதி மீது விதிக்கப்பட்டுள்ள கடல் வலயத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவது குறித்தும்—

சில பொருள்களை வடக்கே எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை விலக்குவதன் மூலம் பொருளாதாரத் தடையை மேலும் தளர்த்துவது குறித்தும்—

இலங்கை அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதுடில்லியில் தெரிவித்தார்.

புதுடில்லியில் அகில இந்திய வானொலிக்குப் பேட்டியளித்த அவர், சமாதானத் தீர்வுக்காக அரசு எடுத்த நடவடிக்கை ஆக்கபூர்வமானதாக அமைந்ததாகவும், சாதகமான நிலையை ஏற்படுத்தியிருப்பதாகச் சொன்னார்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் கோரிக்கைகளை அரசு ஆராய்வதாகவும் —

மீன்பிடிக்கான தடையை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சோனியாவையும் சந்தித்து பேசினார் சந்திரிகா!

புதுடில்லி, மார்ச் 27

இந்தியாவுக்கு விஜயம் செய்த இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மறைந்த ராஜீவ் காந்தியின் துணைவியார் சோனியா காந்தியையும் சந்தித்துப் பேசினார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் மாலை இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள்சர்மா, இலங்கை ஜனாதிபதிக்கு அளித்த வரவேற்புபசாரத்தின் போது இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சந்திரிகாவும் சோனியாவும் பேசிக் கொண்ட விடயங்கள் குறித்து விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

அரசியல் வன்முறையில் தமது கணவன்மாரை இருவரும் இழந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஜனாதிபதிக்கு இந்திய உப ஜனாதிபதி கே. ஆர். நாராயணனும் தனியாக வரவேற்புபசாரம் ஒன்றை நடத்தினார்.

மகாத்மா காந்தியின் சமாதி அமைந்துள்ள ராஜ்காரிட்டுக்கும் ஜனாதிபதி சந்திரிகா விஜயம் செய்து அஞ்சலி செலுத்தினார். (உ)

### இருதரப்புப் பிரச்சினையால்

## பொருளாதார உறவுகள் பாதிக்கப்படக் கூடாது!

### ஆகாசவாணிக்கு சந்திரிகா பேட்டி

புதுடில்லி, மார்ச் 27

தெற்காசிய பிராந்திய நாடுகள் தமக்கிடையேயான இருதரப்புப் பிரச்சினைகள் காரணமாக வர்த்தக, பொருளாதார நல்லுறவு பாதிக்கப்படுவதற்கு இடமளிக்கக்கூடாது

— இவ்வாறு புதுடில்லியில் வைத்து அகில இந்திய வானொலிக்கு அளித்த பேட்டியில் ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்தார்.

இலங்கையில் புதிய அரசு பதவியேற்று புதியபொருளாதார கொள்கை வகுக்கப்பட்ட பின்னர், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி விடயத்தில் இந்திய கைத்தொழில் துறை முக்கிய பங்கை வகிக்க வேண்டும் என இலங்கை எதிர்பார்க்கின்றது என்றும் அவர் கூறினார். (உ)

## சமாதான முயற்சிகளை இந்தியா வரவேற்கிறது

### புதுடில்லியில் கதிர்காமர் தகவல்

புதுடில்லி, மார்ச். 27

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண ஸ்ரீலங்கா அரசு எடுத்து வரும் முயற்சிகளை இந்தியா வரவேற்றுள்ளது.

— இவ்வாறு இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் புதுடில்லியில் அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவும் இனப் பிரச்சனை குறித்து விரிவான பேச்சுக்களை நடத்தி இருந்ததாகவும் திரு கதிர்காமர் குறிப்பிட்டிருந்தார். (உ-7)

### ராஜீவ் கொலைச் சந்தேக நபர்கள்:

## பெண் கைதிகளின் சிறையை ஆண் காவலர்கள் சோதனை

சென்னை, மார்ச் 27

சென்னை பூந்தமல்லி விசேட சிறையில் உள்ள பெண் கைதிகளின் சிறைக் கூடங்களை நடுநிசியில் ஆண் சிறைக் காவலர்கள் பரிசோதனை செய்கின்றனராம்.

இதனை ஆட்சேபித்து இச் சிறையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள ராஜீவ் கொலைச் சந்தேக நபர்கள் கடந்த செவ்வாயன்று தாம் சிறைக் கூடங்களுக்கு திரும்புவதற்கு மறுப்புத்தெரிவித்து, எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நான்கு மணிநேரம் நீடித்த இந்த எதிர்ப்பு நடவடிக்கை பின்னர் பொலீஸாரின் தலையீட்டை அடுத்து கைவிடப்பட்டது.

பெண் கைதிகளின் சிறைக் கூடங்களை ஆண் சிறைக் காவலர்கள் சோதனையிடவில்லை என்றும்—

பெண் காவலர்களே அங்கு தேடுதல் நடத்தினர் என்றும்—

சிறையதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ)

## பிரபாகரன் விவகாரம் குறித்தும் பிரதமர் ராவ் – சந்திரிகா பேசினர்!

### அதனால் பேச்சு நேரமும் நீடித்ததாம்

புதுடில்லி, மார்ச். 27

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனை இலங்கை அரசு இந்தியாவிடம் ஒப்படைக்கும் சாத்தியக் கூறுகள் குறித்து இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் இந்தியா வந்துள்ள இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதாக இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்விடயம் குறித்து பேசியதாக இரு தலைவர்களோ அல்லது இரு அரசுத் தரப்புக்களுமோ செய்திகள் எதனையும் வெளியிடாத போதிலும் —

திரு பிரபாகரன் குறித்து இரு தலைவர்களும் நெடுநேரம் பேசியதனாலேயே குறித்த நேரத்தில் இருவரது பேச்சு வார்த்தை முடிவடையாமல் காலதாமதமாக முடிவடைந்ததாக கூறப்படுகிறது.

சோனியா காந்தியின் ஆதரவாளர்கள் தாம் என கூறிக்கொள்ளும் அர்ஜுன் சிங் குழுவினர் பிரபாகரனை இந்தியாவிற்கு கொண்டு வரவேண்டும் என வலியுறுத்தி வருவதாலும் —

ஜனதாக் கட்சியின் தலைவர் திரு சுப்பிரமணியசுவாமி இவ் விடயம் குறித்து தொடர்ந்து பேசிவருவதனாலும் —

நரசிம்ம ராவ் இவ் விட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பரந்துபட்ட பேச்சுகளின் போது பூநகரி முகாம் பிரச்சினையாக இராது

### யாழ்.வந்து திரும்பிய "ஒப்சேவர்" ஆசிரியர் கருத்து

கொழும்பு, மார்ச் 27

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பரந்துபட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் பூநகரி இராணுவ முகாம் பிரச்சினை ஒரு நெருக்கடியாக அமையாது எனத் தான் நம்புவதாக அண்மையில் யாழ். வந்து திரும்பிய — "ஒப்சேவர்" பத்திரிகையின் ஆசிரியர் — அஜித் சமரநாயக்கா கொழும்பில் தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

நாம் அங்கு சென்றிருந்த போது புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன், நீதித் துறையைச் சேர்ந்த திரு பரா, பொருண்மியத் துறைப் பொறுப்பாளர் திரு. ரவி ஆகியோரை சந்தித்து உரையாடினோம். அவர்களுடனான சந்திப்பிலிருந்து அரசியல் அணுகுமுறைகளில் விடுதலைப் புலிகள் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதை அறிய முடிந்தது.

கௌரவத்துடன் கூடிய ஒரு நிரந்தரத் தீர்வையே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் அத்தீர்வு அவர்களுடைய போராட்டத்திற்குக்கிடைத்த சிறந்த வெற்றியாக அமைய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வு விடயத்தில் புதிய அரசுக்கு ஐ.தே.கவினர் ஆதரவு தர வேண்டும்

### அமரபுர மகாநாயக்கதேரர் வேண்டுகோள்

கொழும்பு, மார்ச் 27

"ஈழப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, ஐ. தே. கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பேதம் காட்டாது இன்றைய அரசுக்கு தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்."

— இவ்வாறு கோரிக்கை விடுத்தார் அமரபுர மகா சங்கத்தின் தலைவரான மடிஹே பஞ்ஞாசிஹ மகாநாயக்க தேரர்.

தங்காலை வஜிரகிரி விகாரையில் அண்மையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டதாவது:–

ஈழப் பிரிவினைவாதம் முன்னைய அரசாங்கத்தின் போதுதான் தோன்றியது.

பிரிவினைவாதிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழித்து நாட்டில் இளைஞர்களுக்கிடையே அமைதியை ஏற்படுத்த இன்றைய அரசாங்கத்தினால் மாத்திரமே முடியும் [illegible] மாக நம்புகின்றனர்.

ஆனால் ஓர் அரசியல் கட்சியால் மாத்திரம் ஈழப் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியாது.

எனவே ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தமக்குள் பேதம் காட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கையில் பல இடங்களில் ஆயுதங்கள், வெடிமருந்துகள் மீட்பு!

கொழும்பு, மார்ச் 27

தென்னிலங்கையில் பல இடங்களில் அண்மைக் காலமாக பெரும் தொகையான ஆயுதங்களும் வெடி மருந்துகளும் அடுத்தடுத்து கண்டு பிடிக்கப்பட்டு வருவதை அடுத்து, பொலீஸாரும் பாதுகாப்புப் படையினரும் உஷார் படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

மாத்தறை மாவட்டம் வீரகெட்டிய பகுதியிலுள்ள முல்கிரியில் பெருந்தொகையான வெடி மருந்துப் பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

தங்காலை பகுதி குற்றத் தடுப்புப் பிரிவினரே இந்த வெடிப் பொருள்களைகண்டு பிடித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஆண் ஒருவரையும், பெண் ஒருவரையும் கைது செய்த குற்றத் தடுப்புப் பிரிவினர் அவர்களை வீரகெட்டிய பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

32 டைனமைட் [illegible], ஒரு கிலோ [illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் பதில் புலிகளின் பரிசீலனையில்

யாழ்ப்பாணம், மார்ச் 27

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விடயத்தில் அரசின் முடிவை மீளாய்வு செய்வதற்கு காலக்கெடு விதித்து தலைவர் பிரபாகரன் அனுப்பிய கடிதத்துக்கு, ஜனாதிபதி சந்திரிகா பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதம் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும்—

விடுதலைப் புலிகள் அப்பதிலை ஆராய்ந்து வருவதாகவும் தெரியவருகின்றது.

ஆனால்—

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்து அரசின் திட்டவட்டமான பதிலை எதிர்பார்த்திருந்த விடுதலைப் புலிகளுக்கு, அரசின் பதில் திருப்திதருவதாக அமையவில்லை என சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவந்தது.

அரசின் பதில் குறித்து புலிகளின் பிரதிபலிப்பு இரண்டொரு தினங்களில் வெளியாகக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

### ஐ. தே. கவின் 17 வருட ஆட்சி:

## சர்வதேச நிதி உதவியில் 12 வீதமே செலவிடப்பட்டது!

### சந்திரிகா திடுக்கிடும் தகவல்

கொழும்பு, மார்ச் 27

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்கள் தமது 17 வருட ஆட்சிக் காலத்திலும் இலங்கைக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டு உதவிகளில் 12 சதவீதத்தை மட்டுமே பயன்படுத்தியுள்ளது. அரசாங்கத் தலைவர்களின் பிழைகள், தவறுகள் காரணமாக எஞ்சிய தொகை உதவிகள் திரும்பிச் சென்றன.

—இவ்வாறு தகவல் வெளியிட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

வெளிநாட்டு விஜயத்துக்காக புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர், கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

ஐ. தே. க. அரசின் மனித உரிமை மீறல்கள் வன் விரய நடவடிக்கைகள் காரணமாக 1994 ஆம் ஆண்டில் லக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் இலங்கைக்கு உதவி அளிக்கவில்லை என்றும்—

புதிய அரசின் கீழ் ஏற்பட்டுள்ள பெரும் மாற்றங்கள் காரணமாக பல உதவிகளை வழங்கஉதவும் நாடுகள் தற்போது முன்வந்திருக்கின்றன என்றும் அவர் அங்கு மேலும் கூறினார். (உ)

### இலங்கை அரசின்

## சமாதான முயற்சிகளை ஆதரிக்கிறார் கிளின்டன்!

கொழும்பு, மார்ச். 27

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காண்பதற்கு இலங்கை மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினை காரணமாக பத்தாண்டுகளுக்கு மேல் இலங்கை பெரும் பாதிப்பை அடைந்து வந்துள்ளது என்றும் கிளின்டன் கூறியுள்ளார்.

அமெரிக்காவுக்கான இலங்கையின் புதிய தூதுவர் ஜயந்த தனபால வாஷிங்டனில் தனது நியமனப் பத்திரங்களை சமர்ப்பித்த சமயமே அமெரிக்கா ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மோதல் தவிர்ப்பைத் தொடர்ந்து பேண இலங்கை அரசு எடுத்துவரும் முயற்சிகளை அமெரிக்கா வரவேற்கிறது எனவும் திரு. கிளின்டன் கூறியதாக அறிவிக்கப்பட்டது.

மோதல் தவிர்ப்பு ஏற்பாடு இனப்பிரச்சினைக்கு விரிவான — நிலையான — தீர்வைக் காண வழிவகுக்கும் என்ற நம்பிக்கையை கிளின்டன் வெளியிட்டார்.

இலங்கை அரசு மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாக்க எடுத்துள்ள குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் அமெரிக்க நிர்வாகத்துக்கு உற்சாகம் அளிப்பதாக உள்ளதென கிளின்டன் மேலும் கூறியதாக அறிவிக்கப்பட்டது. [உ-7]

### வெளிநாட்டு படகில் வந்தவர்கள்

## பொததுவில கடலில் வைதது மீனவர் மீது தாக்குதல்!

கொழும்பு, மார்ச் 27

பொத்துவில கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தங்காலை மீனவர்கள் சிலரை, வெளிநாட்டு மீன்பிடிப் படகொன்றில் வந்த சிலர் தாக்கியதுடன், மீனவர்களின் இயந்திரப்படகுகளையும் சேதப்படுத்தி உள்ளனர்.

இச்சம்பவம் கடந்த19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது.

இரவு நேரத்தில் இரண்டு இயந்திரப்படகுகளில், கடலின் ஐம்பது மைல் தூரத்திற்கு சென்று இவர்மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அச்சமயம், அதிவேக மீன்பிடிபடகு ஒன்றும் கடலில் ஒளிபாய்ச்சி மீன்பிடித்துக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் அந்தப்படகு மீனவர்களின் படகை நோக்கி வந்தது.

அந்தப்படகில் இருந்தோர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பல்லாயிரம் தொன் "கிளிங்கர்" காங்கேசன்துறையிலிருந்து காலிக்கு?

### கப்பலில் அனுப்பப்படுகின்றதாம்

யாழ்ப்பாணம், மார்ச். 27

காங்கேசன்துறையின் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம், [illegible] சிமெந்து நிறுவனம் ஆகியவற்றில் இருந்த பல்லாயிரக்கணக்கான தொன் கிளிங்கரை கப்பல் மூலம் அகற்றி, ருகுணு சிமெந்துத் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லும் நடவடிக்கையை ஸ்ரீலங்கா அரசு ஆரம்பித்திருப்பதாக சிமெந்துத் தொழிற்சாலையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் மூலம் அறியவருகிறது.

1990 ஜூனில் இரண்டாம் ஈழப்போர் ஆரம்பமான சமயம், சிமெந்து தயாரிப்பதற்கான தயார் நிலையில் காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் மட்டும் 33 ஆயிரம் தொன் கிளிங்கர் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாயன்மார்கட்டு அரசடி விநாயகர் தேவஸ்தான சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்பு மலர்

27 - 03 - 1995

## ஆசியுரை

உ

நாயன்மார்க்கட்டு அரசடிப் பிள்ளையார் கோயிலில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று (27-03-95) நடைபெறுகிறது.

விழாக்களிலே சிறந்தது தேர்த்திருவிழாவாகும். இந்த விழாவிற்கான தேரை மேற்படி ஆலயத்தில் சென்ற ஆண்டு மஹோற்சவத்தில் ஆரம்பித்து இந்த ஆண்டு மஹோற்சவத்திற்குள் பூர்த்தியாக்கி இருப்பது பாராட்டுக்குரியது.

இன்று புதிய சித்திரத்தேருக்கான வெள்ளோட்ட விழாவை நாயன்மார் கட்டு வாழ் சைவமக்களும் ஆலய அறங்காவலர்களும் மிகச்சிறப்பாக பூர்த்தியாக்கி இருக்கிறார்கள்.

இப்பெரும் பணிக்கு உதவி புரிந்த அனைத்து விநாயக அடியார்களுக்கும், சகல செல்வங்களும் கிடைத்து விநாயகப் பெருமானுடைய அருளும், வல்லை ஸ்ரீமுத்துமாரி அன்னையின் அருட்கடாட்சமும் கிட்டுவதாக.

ஸ்ரீசோ. தண்டபாணிக தேசிகர்,
தலைவர்,
அகில இலங்கை சைவக்குருமார்
அர்ச்சகர்சபை.

ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில்,
வல்வெட்டித்துறை.

## பிரார்த்தனை உரை

உ

நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்புற நிகழ எல்லாம் வல்ல வேவில் விநாயகரை பிரார்த்திக்கின்றேன்.

தி. விக்கினேஸ்வரன் ஐயா,
ஆதீனகர்த்தா,
வல்வெட்டி வேவில் வீரகத்தி,
விக்னேஸ்வரா தேவஸ்தானம்.

## ஸ்தபதியின் வாழ்த்து!

உ
சிவமயம்
விஸ்வப் பிரமனே நம

எல்லாம் வல்ல நாயன்மார்கட்டுக் குளக்கரை அரசடிப் பிள்ளையார் இன்று புதிய சித்திரத்தேர் இவர்ந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார். குளக்கரையில் பிள்ளையாரை வைத்து வழிபடும் மரபு மிகவும் தொன்மையானது.

நாயன்மார்கட்டு குளக்கரை அரசடி விநாயகர் ஆலயமும் மிகவும் தொன்மையானது. எல்லாம் வல்ல அரசடி விநாயகரின் தேருலா வரும் திருப்பணியில் நானும் இணைந்திருப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்

இவ்வாலயத்தைச் செவ்வனே நிர்வகிக்கும் குருக்கள் குடும்பம் மிகவும் பக்தி சிரத்தையுடன் இவ்வாலயத்தை வழிநடத்துவதை நேரில் அவதானிக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. இச் சித்திரத்தேர் உருவாக்கத்திற்கு இக் குருக்கள் குடும்பம் வழங்கிய ஊக்கமும் ஒத்தாசையும் சொல்லிலடக்க முடியாதவை.

எல்லாம் வல்ல இறைவன் இக்குருக்கள் குடும்பத்திற்கும் இவ்வூர்மக்களுக்கும் திருவருள் பாலிக்க வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இச் சித்திரத்தேர் உருவாகி இன்று வெள்ளோட்ட விழா நடைபெற உதவிய அனைத்து உள்ளங்களையும் ஆறுமுகம் சிற்பாலயம் சார்பில் வாழ்த்தி நன்றி கூறுகிறேன்.

ஓம் தத் புருஷாய வித்மஹே
வக்கிர துண்டாய தீமகி
தன்னோ தந்
திரயே தாது.

ஸ்தபதி ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரி
ஆறுமுகம் சிற்பாலயம்,
திருநெல்வேலி.
தமிழீழம்.

## எழுநூறு ஆண்டுத் தொன்மை கொண்ட ஆலயம்
## இரகுவம்சத்தை அரசகேசரி மொழிபெயர்த்த தலம்

இற்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன் ஈழவள நாட்டின் வடபால் தமிழ்மக்களின் தலைநகராக யாழ்ப்பாணத்து நல்லூர் விளங்கியது. அந்நாளில் ஆட்சி புரிந்த சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி சைவசமயம்



அமரர் சிவஸ்ரீ செல்லையா சதாசிவக்குருக்கள்

மேலோங்கவும் தமது ஆட்சி சிறக்கவும் வேண்டி திக்குகள் தோறும் பல ஆலயங்களை அமைத்து வந்தான். இவ்வாறான ஆலயங்களுள் ஒன்று தான் யாழ். நாயன்மார் கட்டு ஸ்ரீ அரசடி விநாயகர் ஆலயம்.

ஆலயச் சூழலில் அரசு, வேம்பு, தேக்கு, சமண்டலை, தென்னை, வன்னி, மா, பலா, வாழை, கமுகு முதலான சோலை மரங்கள் ஒரு புறமும், ஆலயத்தின் முன் அழகான தாமரைக்குளமும்,

### தேவஸ்தான பரிபாலகர்களும் உரிமையாளர்களும்

அதன் நாற்புறமும் படிக்கட்டுகளும், நடுவில் இரண்டுமாடி நீராழி மண்டபமும் குளத்தின் வடபால் நாயன்மார் குருபூசை மண்டபமும் மன்னனால் அமைக்கப்பட்டன.

தென்னிந்தியாவிருந்து சிவஸ்ரீ ஆ. கைலாயநாதக் குருக்கள் குடும்பத்தை வரவழைத்து நித்திய நைமித்திய பூசைகளைச் செய்து பரம்பரையாக ஆலயத்தைப் பரிபாலித்து வரும்படியும் மன்னன் வேண்டிக் கொண்டான். அதற்கமைய இன்றுவரை அந்தப் பரம்பரையினரே ஆலயத்தையும் நைமித்திய பூசைகளையும் கவனித்து வருகிறார்கள்.

தற்போது நீராழி மண்டபமும் படிக்கட்டுகளும் காலத்தால் அழிந்து சிதைந்து போனாலும் மக்கள் பலரின் நினைவில் இன்றும் நிலையாக நிற்கின்றது. இதற்குச் சான்றாக நீராழி மண்டபத்தின் அத்திவாரம் இப்போதும் குளத்தின் நடுவில் உள்ளது.

**சிவாசனம் கண்டெடுப்பு**

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் குளத்தைஆழமாக்கும் பணியில் ஈடுபட்ட அரசாங்கமும் பொதுமக்களும் குளத்திலுள் ஒரு கல்வெட்டுச் சிவாசனத்தைக் கண்டெடுத்தனர். அதில் ''கரிங சா உரு இல் சிங்கையாரியனால் தீர்த்தம் கொடுக்க இக் குளம் வெட்டப்பட்டது'' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்தச் சிவாசனம் யாழ். பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இற்றைக்கு முந்நூறுஆண்டுகளுக்கு முன் ஆட்சி செய்த சிங்கை பரராசசேகரனின் மருகன் வித்துவான் அரசகேசரி திருக்குளத்தின் நீராழி மண்டபத்தில் இருந்து வடமொழிக்காவியமான 'இரகுவம்சம்' நூலைத் தமிழில் பாடினார் என்று வரலாறு கூறும்.

இந்த ஆலயத்தைத் தினமும் அரசகேசரி வழிபட்டு வந்ததால் இந்த விநாயகர் (அரசகேசரிப்பிள்ளையார்' எனவும் அழைக்கப்படுகின்றார். இதே போன்று குளத்தின் அருகில் இந்த ஆலயம் அமைந்துள்ளதால் ''குளத்தடிப்பிள்ளையார்'' என்றும் ஊர்மக்களால் அழைக்கப்படுகிறார்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் இந்த ஆலயம் முற்றாக அழிக்கப்பட்டது. மக்கள் வழிபாடு செய்ய முடியாத நிலையில் இந்த விநாயகரைப் பூக்கூடையில்மறைத்து வைத்து வழிபட்டனர் என எமது மூதாதையர் கூறுவர். ஆங்கில ஆட்சி வந்தபின் கதிர்காமநாதக்குருக்களின் மகன் ஆறுமுகக்குருக்களின் காலத்தில் (1800 — 1825) அழிந்த ஆலயம் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

அதன்பின் ஆறுமுகக்குருக்களின் மகன் செல்லையாக் குருக்கள் சில திருத்தவேலைகளைச் செய்து 1916-1-17 இல் புனருத்தாரண கும்பாபிஷேகம் செய்துரைத்தார். செல்லையாக்குருக்களின் இறுதிக்காலத்திலும் 27-3-1952 இல் [கர வருடம் பங்குனி மாதம் 14ஆம் நாள்] ரேவதி நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து அன்றிலிருந்து இரண்டு காலப்பூசையும் அலங்கார உற்சவமும் நடைபெற்றுவந்தன.

செல்லையாக் குருக்களின் காலம் 12-2-1967 இல் நிறைவுபெற்றது. தொடர்ந்து தந்தை வழி தனயன் என்ற முறையில் சதாசிவக்குருக்கள் 1980 இல் மகாமண்டபம், தரிசன மண்டபம், தம்ப மண்டபம் முதலியவற்றைப் புதிதாக அமைத்துக் கொட்டகையையும் நிறைவு செய்தார். 1984இல் வசந்த மண்டபமும் 35 அடி உயரமான மணிக்கோபுரமும் அமைக்கப்பட்டன. 1987இல் கலவரத்தின்போது ஆலயத்தில் ஏற்பட்ட பழுதுகளைச் சீர்செய்ய வேண்டி 20-4-88 இல் பாலஸ்தாபனம்செய்து துவிதளவிமானம் அமைத்து வர்ணம் தீட்டி முறையே பஞ்சமாடம் நாகதம்பிரான், வைரவர், சண்டேசுரர், யாகசாலை, கொடிமரம் முதலிய திருப்பணிகள் நிறைவு செய்யப்பட்டன. பெருமானின் கருணையினாலும் அடியார்களின் உதவியினாலும் விபவருடம் தைமாதம் 28ஆம் நாள் (10-2-1984) ரேவதி நட்சத்திரத்தில் புனருத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடத்தப்பட்டு மண்டலாபிஷேகமும் தண்டிகை உற்சவமும் சிறப்புற நடந்தேறின.

( 6ஆம் பக்கம் பார்க்க)



## பற்றறுத் துன்பாதப்பற்ற ருளுவாயே

வையமதிற் பூசைதனை வரை முறையாய்
வகுத்தநெறி தவறாது மறையோர் தாமும்
செய்துவரிற் சேமமெலாம் சேரும் என்றே
செப்புமொழிக் கூற்றதனை யுண்மை யாக்கி
துய்யவொரு வருடமதுட் டுலங்கு தேரிற்
சோதியென அமர்ந்தருளாம் திருவை வாரும்
தெய்வமென வருவிநா யகனை யேற்றிச்
செய்யதிருப் பாதமதைச் சென்னி வைப்பாம்.
ஆலால முண்டசிவன் அகம்பூரிக்க
அவதரித்த ஐங்கரனே அவனி போற்றும்
மேலான திருக்குளமும் வயல்கள் தோட்டம்
மிளிருபதி யாழ். நாயன் மார்கட் டூரின்
கால் போலக் கருதுமர சடிவாழ் கோவே
கருதிவரு புனிதர்களுக் கருளும் தேவே
பாலாழி தனிற்துயில் மா லவன்ம ருகா
பற்றறுத் துன் பாதப்பற் றருளு வாயே!

— நாயன்மார்கட்டு இ. குகதாசன்

## வெள்ளோட்ட விழா

உ

★ நிகழ்ச்சிகள் ★

காலம்: 27-03-95 திங்கட்கிழமை மாலை 3-30மணி

தலைவர்: சிவஸ்ரீ சோ. தண்டபாணிதேசிகர் J. P.
[தலைவர் அகிலஇலங்கை சைவகுருமார் அர்ச்சகர் சபை]

மங்கள இசை:
ம. சிவசுப்பிரமணியம் குழுவினர்
நல்லூர்

1. தேவாரம்:
2. மங்கள விளக்கேற்றுதல்:
 மஹோற்சவ பிரதம குரு
 சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள்
3. வரவேற்புரை:
 சிவஸ்ரீ ந. கேதீஸ்வரக் குருக்கள்
 ''சாதகஞானபானு''
 [அ. புரம் கதிரேசன் தேவஸ்தான பிரதமகுரு)
4. தலைமையுரை:
5. ஆசியுரை:
 சிவஸ்ரீ சி. ஆறுமுகக்குருக்கள் பிரதமகுரு
 (வண்ணை வீரமாகாளியம்மன் தேவஸ்தானம்)
6. சிறப்புரைகள்
 திரு. வே. பொ. பாலசிங்கம்
 (யாழ் / மாநகர முதல்வர்)
 திரு. சிவலிங்கராஜா M. A.
 [சிரேஷ்ட விரிவுரையாளர் தமிழ்த்துறை பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்]
 திரு. து. வைத்திலிங்கம்
 (பிரதேசசெயலாளர். மேலதிக அரசாங்க அதிபர் வலி. தெற்கு - மேற்கு சண்டிலிப்பாய்]
 திரு. க. கனகநாயகம்
 (வர்த்தலைவிளான் கிராம சேவையாளர்)
 திரு. பா. கணேசலிங்கம்
 (விஞ்ஞான ஆசிரியர் மந்துவில் றோ. க. த. க. பாடசாலை)
 திரு. இ. அரசகுலசூரியர்
 [ஆசிரியர் யாழ். கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்)
 திரு. சொ. மன்மதராஜலிங்கம்
 (தபால் தரம் பிரிப்பாளர், யாழ்ப்பாணம்)
 திரு. இ. சந்திரகுமார்
 (கிராம சேவையாளர் நல்லூர்)

சிற்பச்சக்கரவர்த்தி
திரு. ஆ. ஜீவரத்தினம் ஆசாரியார்
அவர்களை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்
பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பவர்
திரு. ச. தில்லைநாதன்.
(சுவாமி அலங்கரிப்பாளர் நாயன்மார் கட்டு)

7. நன்றியுரை
8. தேவாரம்

தேவஸ்தானம்

நாயன்மார்கட்டு
26-03-1995

## தேர் உற்சவச் சிறப்பு

உற்சவங்களுள் சிறந்தது தேர் உற்சவம் எமது சைவ சமயத்தவரின் கோட்பாடு; சம்ஹார உற்சவம் என்று தேர் உற்சவத்தை கருதுகிறோம்

மனிதனின் தேகத்தை உருவகிக்கும் தத்துவரீதியிலேயே புதிய சித்திரத்தேர் அமைந்துள்ளது. தேரின் சிங்காசனமே மனித இருதயத்தின் பிரதி அம்சமாக விளங்குகிறது.

தேர் உற்சவத்தை உற்று நோக்கினால் முத்தியின்பத்தினையும், நல்வாழ்வையும் கொடுப்பதே ஆகும். அழிக்கப்பட்டு அதன் பலனாக இறையடி சேர்ந்தமை புலனாகிறது.

கஜமுகா சூர சம்ஹாரத்தினால் அழிக்கப்பட்ட சூரனை விநாயகர் முக்தி அளித்து தனது வாகனமாக்கி அருள் புரிந்தார். இவ்வாறு சம்ஹார உற்சவத்தில் பலர் முக்தியடைந்தமையை எமது புராண வரலாறு கூறுகின்றது.

ஆலயத்துள் புகுந்து வழிபடுபவர்களுக்கு காட்சி தந்து அருள் பாலிக்கிறார். ஆலயத்துக்குள்ளே செல்ல முடியாதவர்களுக்கு அருள் காட்சி கொடுப்பதற்காக இறைவன் திருவீதி உலாவிலே தேரில் வருகிறார்.

விருக்ஷங்களுள் சிறந்த விருக்ஷமாக கூறப்படும் அரச மரத்திலேயே வீற்றிருப்பவரும் மன்னனால் வெட்டப்பட்ட தீர்த்தக் குளத்தின் கண்ணே அமைந்தவரும், மன்னரினால் வழிபட்ட விநாயகருமாகிய அரசகேசரி பிள்ளையாரின் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட நன்னாளிலே ஊரவர்கள், பக்தர்கள், தொண்டர்கள் அனைவரும் நல்வாழ்வு பெற்று பெருவாழ்வு பெற அரசடி விநாயகரின் ஆசிகள் என்றென்றும் கிடைக்க வேண்டும்.

— சிவஸ்ரீ ந. கேதீஸ்வரக்குருக்கள்,
''சாதகஞான பானு'',
பிரதமகுரு,
கதிரேசன் தேவஸ்தானம்,
அனுராதபுரம்.

## அல்ஜீரியாவில் தீவிரவாதிகள் 300 பேர் பலி

அல்ஜியர்ஸ், மார்ச். 27

அல்ஜீரியாவின் தலைநகர் அல்ஜியர்ஸில் இராணுவத்தினர் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் இஸ்லாமிய தீவிரவாதிகள் எனக் கூறப்படும் முந்நூறு பேர் கொல்லப்பட்டனர்

சுமார் 30 வாகனங்களில் தலைநகர் அல்ஜியர்ஸ்நோக்கி இஸ்லாமியத் தீவிரவாதிகள் சென்றுகொண்டிருந்த வேளை அவர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதலை நடத்தியுள்ளனர். (ஐ-6)

## தமிழ் கைதிகள் தப்பிய விவகாரம்:
## சிறைப் பாதுகாவலருக்கு பிணை வழங்க மறுப்பு!

கொழும்பு, மார்ச்27

சென்னை மத்திய சிறையிலிருந்து 9 இலங்கைத் தமிழ் கைதிகள் தப்பி ஓடியதற்கு உடந்தையாக இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள 5 சிறைப் பாதுகாவலர்களுக்கு சென்னை பிரதம நீதிபதி எம் கோபாலசாமி பிணை வழங்க மறுத்துள்ளார்.

கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி இரவு சென்னை மத்திய சிறைச்சாலையில் இருந்து இந்தியத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த 9 இலங்கைத் தமிழ் கைதிகள் தப்பி ஓடினர். சம்பவதினம் மேற்படி சிறைப் பாதுகாவலர்கள் ஐவரும் கடமையில் இருந்தனர். ஆனால் கைதிகள் தப்பிச் சென்றவேளை அவர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்யவில்லை என நீதிபதி தெரிவித்தார்.

## ஆலயங்களில்

அரியாலை நொத்தாரிஸ் வீதி அண்ணமார் ஆலய புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ணன் ஆசியுரை வழங்குவார்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. செ. கிருஷ்ணராஜா. திரு. ம. ஜெயராம சர்மா, திரு. பா. நகுலேஸ்வரசர்மா ஆகியோரின் சிறப்பு சொற்பொழிவு [illegible]

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச். 27

அமரர் ஈ. கே. குமரையா ஞாபகார்த்த கிண்ணத்துக்காக அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்திவரும் — 9பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான — விலகல் முறை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு :-

★ 3 30 மணி:- பாடும்மீன் ''ஏ'' அணி எதிர் சென். ஹென்றிஸ் அணி

★ 4. 30 மணி:- பாடும்மீன் ''ஏ'' அணி எதிர் சென். ஹென்றீஸ் ''பி'' அணி (உ-20)

★ ★ ★

சத்தியா விளையாட்டுக்கழகம் அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளும் அணிகளின் விவரம்வருமாறு:-

★ 3 00 மணி:- அராலி பாரதி வி. க அணி எதிர் ஏழாலை லக்கிஸ்ரார் அணி

★4.00 மணி:- யங்ஹென்றிஸ் வி.க அணி எதிர் கலைநகர் வி. க அணி

(உ-20)

## வியாழனன்று 'நரோமா' வந்து திரும்பும்

வடமராட்சி, மார்ச் 27

திருகோணமலையிலிருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் நரோமா கப்பல் நாளை மறுதினம் மாலை புறப்பட்டு, அடுத்த நாள் வியாழக்கிழமை காலை பருத்தித்துறையை வந்தடையும்.

அன்றையதினமே மற்றொரு தொகுதி பயணிகளுடன் பருத்தித் துறையிலிருந்து அக்கப்பல் திருமலைபுறப்படும்.

(உ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை பூபதி நினைவு நாள் உணர்வுடன் எங்கும் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27
தியாக மரணமடைந்த அன்னை பூபதியின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் குடாநாடெங்கும் உணர்வு பூர்வமாக நடைபெற்று வருகின்றன.

வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் நினைவு நாள் நிகழ்வுகளில் மக்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி வருகின்றனர்.

பிரதான வீதிகள், முக்கிய சந்திகள் மற்றும் சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்ற சங்கங்கள், அரச அலுவலகங்கள், பாடசாலைகள், விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள், பாசறைகள், மற்றும் பொது இடங்களில் அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் அன்னை பூபதியின் உருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

தினமும் தீபம் ஏற்றி மலர் சொரிந்து அஞ்சலி செய்யும் நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

பாடசாலை மாணவர்களும் அன்னை பூபதி நினைவைப் போற்றும் பல்வேறு நிகழ்வுகளில் பங்குபற்றி வருகின்றனர்.

கிராமப் பகுதிகளில் நினைவுக் கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம் பெற்று வருகின்றன.

வடமராட்சியின் பிரதான நகரப் பகுதிகளிலும், தென்மராட்சியின் பிரதான நகர்ப் பகுதிகளிலும் அலங்கரிக்கப்பட்ட பல பந்தல்கள் காணப்படுகின்றன. பிரதான வீதிகளிலும், சிவப்பு, மஞ்சள் வர்ணக் கொடிகளும் பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன.

பல இடங்களில் அன்னையின் நினைவாக சிரமதானப் பணிகள் பல இடம்பெறுகின்றன.

அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளிலும் மக்கள் பங்குபற்றி வருகின்றனர். [ஐ-31]

## அரச திணைக்களங்களுக்கான ஆளணி தேவைகள் குறித்து தொடர் கலந்துரையாடல்

### யாழ். செயலகத்தில் நடக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ் மாவட்ட செயலகம் மற்றும் திணைக்களங்களுக்கான ஆளணி பற்றி தீர்மானிப்பதற்காக— சம்பள சீர்திருத்தச்சபையினால் நியமிக்கப்பட்டுள்ள— கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. சீ. லோகேஸ்வரன் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் எதிர்வரும் 5 ஆம் திகதி தொடக்கம் யாழ்செயலகத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல திணைக்களத் தலைவர்களையும், பிரதேச செயலர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளை தமது திணைக்களங்களிலுள்ள வெற்றிடங்கள் பற்றிய விவரங்களை இதுவரை அனுப்பி வைக்காத திணைக்களத் தலைவர்கள் உடனடியாக அவற்றைத் தமக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார். (ஐ-14-7)

## வாடகை கார்களை பதிவு செய்க

யாழ்ப்பாணம், மார்ச் 27
வடமராட்சியில் வாடகைச் சேவையில் ஈடுபடும் பதிவு செய்யாத மோட்டார் கார்கள் அனைத்தையும் எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட வாடகை மோட்டார் கார் சேவைச் சங்கத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என வடமராட்சி வாடகை மோட்டார் கார் சேவைச் சங்கம் அறிவித்துள்ளது. (ஐ-14)

## திருமந்திர வகுப்புகள்

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ். இந்துக்கல்லூரி ஆரம்பப்பிரிவு பாடசாலையில் பிரதி திங்கட்கிழமை தோறும் இலவச திருமந்திர வகுப்புகள் நடைபெறவுள்ளன.

இவ்வகுப்புகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4மணி முதல் ஆரம்பமாகவுள்ளன.

இதே வேளை அங்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சித்தாந்த வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. [ஐ-14]

## கிராமிய பாசறை மாதாந்த நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 27
புத்தூர், சிறுப்பிட்டி கிராமியப்பாசறை மாதாந்த நிகழ்ச்சி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு அண்ணா சனசமூகநிலையத்தில் நடைபெறும்.

வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் போன்ற விளையாட்டு நிகழ்வுகளும் இரவு 7மணி முதல் கருத்துரைகள், கலைநிகழ்ச்சிகள் என்பனவும் இடம் பெறும். (ஐ-14)

## சென்.ஜேம்ஸ் தேவாலயம் புனரமைப்பு

குருநகர், மார்ச் 27
சுப்பசொனிக் குண்டு வீச்சினால் சேதமடைந்த குருநகர் சென்.ஜேம்ஸ் தேவாலய புனருத்தாரான வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

தேவாலயத்தை முன்னர் இருந்தது போன்றே அமைக்கும் பணியை ஆலய பங்கைச் சேர்ந்த மக்கள் நிதி வழங்கி ஆரம்பித்துள்ளனர். (ஐ-15)

## கந்தர்மடத்தில் ஔவையார் விழா

யாழ்ப்பாணம், மார்ச் 27
கந்தர்மடம், ஆத்திசூடி வீதி, ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் நடத்தும் ''தமிழ் மகள்'' ஔவையார் விழா இன்று திங்கட்கிழமையும், நாளை செவ்வாய்க்கிழமையும் மாலை 6மணி முதல் நடைபெறவுள்ளது.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை மாலை 6மணிக்கு மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

பண்டிதர் த. பொன்னம்பலவாணர் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ''ஔவை தமிழ்'' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

''ஆதாரமாய் நம் அடிமைத் தளையறுக்க மூதாட்டி சொன்ன மொழி'' என்ற தலைப்பிலான கவியரங்கம், ''ஔவைப் பாடல்களில் பெரிதும் போற்றப்படும் கருத்து எது'' என்பது பற்றிய சுழலும் சொற்போர் ஆகிய நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும்.

விழாவை ஒட்டி ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறவுள்ளன. (ஐ-14)

## மகளிர் மன்ற உறுப்பினர் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 27
வலிகாமம் கோட்டத்தில் உள்ள மகளிர் மன்றங்களின் தலைவர்கள செயலாளர்களுக்கான கூட்டம் ஒன்று அடுத்த மாதம் முதலாம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆடியபாத வீதி, திருநெல்வேலியில் உள்ள விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பொது நிர்வாக சேவையின் கீழ் பதிவு செய்யப்பட்ட, பதிவு செய்யப்படாத அனைத்து மகளிர் மன்றங்களின் தலைவர்கள், செயலாளர்கள் அனைவரையும் அதில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி சு. தணிகைச் செல்வி கேட்டுள்ளார். (ஐ)

## புதுடில்லியில் பரபரப்பு!

# திடீரென காணாமற்போனார் முன்னாள் அமைச்சர் திவாரி!

### அவர் பாதுகாப்பாக இருப்பதாக பின்னர் தகவல்

புதுடில்லி, மார்ச் 27
முன்னாள் உள்துறை அமைச்சரும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான என் ரி திவாரி திடீரென்று காணாமற் போனதை அடுத்து புதுடில்லியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஆயினும் தாம் பத்திரமாக இருப்பதாக நேற்றுக் காலை அவரே தொலைபேசி மூலம் டில்லியில் உள்ள ராஜ்யசபா எம் பி ஒருவருடன் தொடர்பு கொண்டு தெரிவித்ததை அடுத்து பதற்றம் சற்று தணிந்தது.

நேற்று முன் தினம் புதுடில்லியில் இருந்து லக்னோவுக்கு விமானம் மூலம் செல்ல இருந்த திவாரியை திடீரெனக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

அதனையடுத்து இந்தியா முழுவது பொலீஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டனர்.

அவரை கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டன.

திவாரி காணாமற்போன செய்தி பரவியதும் புதுடில்லியில் பெரும் பரபப்பு ஏற்பட்டது. அரச வட்டாரங்களிலும் பதற்றம் ஏற்பட்டது.

ஆயினும் விமானம் மூலம் செல்வதாக இருந்த திவாரி சஜுரோலாவில் இருந்து ரயில் மூலம் லக்னோ சென்று பின்னர் அங்கிருந்து திரும்பி சாலை மார்க்கமாக புதுடில்லியில் இருந்து முராதபார் மாவட்டத்துக்குச் சென்றார் என்றும் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-14]

## இரண்டாம் ஈழப்போர் காலத்தில்

# திருமலையில் கைதான தமிழர் குறித்து விவரம் வெளியிட படையினர் மறுப்பு

திருகோணமலை, மார்ச் 27
இரண்டாம் ஈழப்போர் நடைபெற்ற காலத்தில் திருமலை மாவட்டத்தில் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டவர்கள் தொடர்பான தகவல்கள் குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இரண்டாம் ஈழப்போர் காலத்தில் திருகோணமலையில் நடைபெற்ற பல்வேறு இராணுவ சுற்றி வளைப்புகளின் போது பலர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் சிலர் பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஏனையோரின் நிலை என்ன என்பது இன்னமும் தெரியவில்லை.

காணாமற் போனோர் பற்றிய விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு திருமலையில் இருந்தும் பல புகார்கள் கிடைத்திருந்தன

இது தொடர்பான விசாரணைகள் அண்மையில் அங்கு ஆரம்பமாகின.

அதன்போது இரண்டாம் ஈழப்போர் நடந்த காலத்தில் திருமலையில் முக்கிய பதவி வகித்த பிரிகேடியர் தென்னக்கோனிடமும் விசாரணைக் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர். இவர் தற்போது மன்னார் இராணுவ இணைப்பதிகாரியாக பதவி வகித்து வருகிறார்.

1990 யூலை 11 ஆம் திகதி பொலீஸார் இராணுவத்தினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து திருமலையில் பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டனர்

அப்போது பல தமிழ் பொது மக்களை படையினர் கைது செய்தனர்.

இது குறித்து விசாரணைக் குழுவுக்கு சாட்சியம் அளித்த பிரிகேடியர் தென்னக்கோன் கைது செய்த சகலரையும் தாம் விடுதலை செய்ததாகவும், காணாமல் போனோர் தொடர்பாக தமக்கு எதுவும் தெரியாது என்றும் கூறியுள்ளார். [ஐ-5]

## தமிழ்நாடு ''ஜெ. ஜெ. நாடு'' ஆகலாம்

# ஜெயலலிதாவுக்கு அளவுக்குமீறிய விளம்பர வெறி பிடித்துள்ளது!

### சாடுகிறார் கோபாலசாமி

புதுடில்லி மார்ச் 27
தமிழ்நாட்டிற்கு 'ஜெ.ஜெ. நாடு'' என்று இன்னும் சில நாட்களில் பெயர் சூட்டுகிற அளவுக்கு ஜெயலலிதாவின் விளம்பர ஆசை வெறி பிடித்துள்ளது'.

இவ்வாறு சாடியிருக்கிறார் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி..

அண்மையில் அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

''பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் நிதி உதவியுடன் தமிழ் நாட்டில் உள்ள நூறு மேல் நிலைப்பள்ளிகளில் டாக்டர் ஜெ ஜெயலலிதா மாநில நற்பணித் திட்டம் என்ற தமிழ் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஆணையை தமிழக அரசு போட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான செலவில் 40 வீதத்தை மட்டுமே மாநில அரசு வழங்கியுள்ளது. மிகுதி 60 வீதமும் பெற்றோர், ஆசிரியர் கழகங்களிடம் இருந்தே பெறப்படுகின்றது.

இது ஜெயலலிதாவின் வஞ்சகத்திட்டம் என்பதுடன் மாணவர் சமுதாயத்தைப் பாழடிக்கக்கூடிய கட்சி வெறி பிடித்த திட்டமும் ஆகும்.

இத்திட்டத்திற்கான ... விதமான தொகையும் ஆசிரியர் கழகங்களிடம் ... டாயப்படுத்தியே வசூல் செய்யப்படுகின்றது.

வழிபாட்டுத் தலங்களுக்கு ஒப்பான கல்விக் கூடங்களில் இருந்து மேலும்மேலும் பணம் வசூலிப்பதானது வழிப்பறிக் கொள்ளை போன்றது.

அண்மையிலும், அண்ணா பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான 47ஏக்கர் நிலம்- ஜெயலலிதா திரைப்பட நகர் அமைப்பிற்கென, ஜெயலலிதா அரசினால் எடுக்கப் பட்டுள்ளது.

எல்லாம் ஜெயலலிதா மயமாகவே இருக்க வேண்டும் என்று ஜெயலலிதா பேராசைப்படுகிறார். அவர் ஏதேர்ச்சதிகாரமாகச் செயற்படுகின்றார்.''

இன்னும் பல குற்றச்சாட்டுகள் ... தெரிவிக்கப்பட்டுள்ளன. [ஐ-5]

## புலிகளின் குரல் வானொலியில்

27 — 03 — 1995
திங்கள் இரவு
- ★ 8-02 — தளிர்கள் — சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
- ★ 8-20 — தாயகப்பாடல்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தரிசனம் — சுதேச மருத்துவர் செல்வி மங்களாம்பிகை அம்மாள் இராஜலட்சுமியுடனான செவ்வி

28 — 03 — 1995
செவ்வாய் காலை
- ★ 7-02 —மாவீரவணக்கம்
- ★ 7-15 — இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்.

## தமிழீழ வானொலி ஒலிபரப்பு

திங்கள் மாலை
- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — ஆழியமுதம்
- ★ 5-30 — மாணவர் பக்கம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — நேயர் நெஞ்சம்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு

## உல்லாச பயணிகள் படையெடுப்பு

வடமராட்சி, மார்ச் 27
வடமராட்சிப் பகுதியை நோக்கி மீண்டும் உள்ளூர் உல்லாசப் பயணிகள் படை எடுத்துள்ளனர்.

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவில், பருத்தித்துறை துறைமுகம், முதலாம் சட்டைச் சந்தி மேஜர் ரஞ்சன் சித்தப்பா பூங்கா, வல்லிபுரக் கோவில், மணல்காடு, நாகர்கோவில போன்ற இடங்களைப் பார்வையிடுவதில் இவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். [ஓ-173]

## மட்டு நகர் செல்கிறார் பொன்சேகா

மட்டக்களப்பு, மார்ச் 2
வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி மட்டக்களப்புக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருக்கிறார்

அன்றைய தினம், மட்டக்களப்பு மாவட்ட புனரமைப்பு அபிவிருத்தி தொடர்பான மாநாடொன்றை ஆளுநர் தலைமையில், செயலகத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இம் மாநாட்டில் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலர்கள் மாவட்டத் திணைக்களத் தலைவர்கள் ஆகியோரும் கலந்து கொள்ள உள்ளனர். (ஓ-5)

(ஓ-173)

## மேலதிக செயலராக மாரிமுத்து

கொழும்பு, மார்ச் 27
தகவல் விமானபோக்குவரத்து, உல்லாசப் பயணத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவின் அமைச்சின் மேலதிக செயலாளராக திரு. கே. மாரிமுத்து நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் உயர் பதவி ஒன்றில் நியமனம்பெறும் முதல் இந்திய வம்சாவழிப் பிரஜை இவராவார். (ஐ-4)

# பூப்பு நீராட்டு விழாவில் இளைஞன் சுட்டுக் கொலை

### எம்பிலிப்பிட்டியவில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 27
பூப்பு நீராட்டு விழா நடைபெற்ற வீட்டில் வைத்து இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அண்மையில் தென் பகுதியில் இடம் பெற்றது.

எம்பிலிப்பிட்டிய பகுதியில் உள்ள ஒரு வீட்டில் யுவதி ஒருவரின் பூப்பு நீராட்டு விழா கடந்த வெள்ளியன்று நடந்தது.

அன்று இரவு ஓட்டோ ஒன்றில் வந்த இனந்தெரியாத இருவர் அங்கு சென்று அந்த யுவதியை வணங்கி விட்டு அருகில் நின்ற 17 வயது இளைஞன் மீது திடீரெனத் துப்பாக்கியால் சுட்டனர். அந்த இளைஞன் கீழே விழுந்தபின் அவரை கத்தியால் வெட்டி விட்டு அவர்கள் இருவரும் தப்பிச் சென்றனர்.

இச்சம்பவத்தால் பூப்பு நீராட்டு விழாவில் கலந்து கொண்டிருந்தவர்கள் பீதியால் பெரும் அல்லோலகல்லோலப் பட்டனர்.

இந்த இளைஞனை சுட்டுக்கொன்ற இரு நபர்களையும் தனக்கு முன் பின் தெரியாது என்றும் —

அவர்கள் இராணுவத்தில் இருந்து தப்பி வந்தவர்களாக இருக்கக் கூடும் எனவும் ஓட்டோ சாரதி பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞனின் தந்தையார் ஐ.தே கவுக்கு ஆதரவாகச் செயற்பட்டதற்காக ஜே.வி.பி. காலத்தில் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## 6 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து

# புத்தளத்தில் முஸ்லிம் அகதி உண்ணாவிரதம் இருக்கிறார்

கொழும்பு, மார்ச், 27
வட பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து புத்தளம் — மன்னார் வீதியிலுள்ள 'சோல்டன் ஏ' அகதி முகாமில் வசித்து வரும், மேற்படி முகாமின் தலைவரான ஜனாப் அபூபக்கர் நியாஸ் என்ற 32 வயது முஸ்லிம் அகதி 6 கோரிக்கைகளை முன்வைத்து சாகும் வரையான உண்ணா விரதத்தை ஆரம்பித்துள்ளார்.

- ★ எமக்கு சண்டை வேண்டாம் சமாதானமே வேண்டும்,
- ★ இன்னமும் விடுவிக்கப்படாத 37 முஸ்லிம்களையும் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலைப் புலிகள் விடுதலை செய்ய வேண்டும்.
- ★ வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்களை சொந்த இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ★ எமக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணப் பொருள்களை உரிய தவணையில் வழங்க வேண்டும்.
- ★ எமது பிரச்சினை தீரும் வரை எமது அடிப்படை தேவைகளை அரசு பூர்த்தி செய்து தரவேண்டும்.
- ★ இடம் பெயர்ந்த எமக்கு செய்யப்படும் புறக்கணிப்பை அரசு நிறுத்த வேண்டும்

என்ற கோரிக்கைகளை முன்வைத்தே அவர் உண்ணாவிரதத்தை கடந்த புதன் கிழமை ஆரம்பித்துள்ளார். [ஓ-14]

## மட்டு. கோட்டைக் கல்லாறில்

# மாணவரின் பதிவேட்டை பரிசீலிக்கிறது ராணுவம்!

மட்டக்களப்பு, மார்ச் 27
மட்டக்களப்பு கோட்டைக் கல்லாறு பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் மாணவர் வரவு பதிவேடுகள் தினமும் இராணுவத்தினரால் பரிசீலிக்கப்படுகின்றன.

யாராவது ஒரு மாணவர் பாடசாலைக்கு ஒருநாள் வராது விட்டாலும் அம் மாணவர் பாடசாலைக்கு வராத காரணத்தை கடிதத்தில் எழுதி அப்பகுதி பொலீஸ் நிலையங்களில் ஒப்படைக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகிறது. (ஓ-5)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வே. கருணாநிதி
(C. I. M. A விரிவுரையாளர்,
R. R. I கொழும்பு - யாழ் நிறுவகரும் பணிப்பாளரும்)

மலர்வு: 05-01-1946
உதிர்வு: 07-04-1994

திதி: 27—3—995

எண்ணும் எழுத்தும் கண்ணாக
இருந்தாய் பலரை உருவாக்கி
மண்ணில் வாழ வைத்தாயே
மனைவி மக்கள் தமை விட்டு
விண்ணில் வாழச் சென்றாயே
வேகும் உள்ளம் அறியாயோ
என்றும் உன்னை மறவோமே
இறைவன் பாதத்துறைவாயே.

அன்பு மனைவி — தயாநிதி
(புள்ளி விவரக் கிளை, யாழ. செயலகம்)
அன்பு மக்கள் — காண்டீபன், கார்த்திகா, காவேரி. சஜன்.

212, சச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(35905)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள M 7 வீடியோ கமெறா விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு: செல்வா வீடியோ கைதடி தெற்கு, கைதடி. (8454)

உயர் இன (High Brid) அல்சேஷன் குட்டிகள் விற்பனைக்குண்டு. Father Black Alsasion Mother Big Borned Alsasion ச. பாலச்சந்திரன் (பெரியண்ணை), நாலுகால் மடம், ஆனைக்கோட்டை. (சி-643)

நல்ல நிலையிலுள்ள இத்தாலி மொடல் D. L. லம்பிரட்டா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 417, நாவலர் வீதி, ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம். (35904)

லைஹலன், லோமன் சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் தொகையாகத் தேவைப்படுபவர்கள் முன் கூட்டியே பதிவு செய்து மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். மல்வம் வீதியூடாக, சிங்கம் வீதி. உடுவில். [35891]

## வகுப்புகள்

கேக் ஐசிங், மாச்சினி அலங்காரம், Fondant Icing. ஒப்பனைக்கலையும், தலையலங்காரம் பூ அலங்காரங்கள், மலர்ச்செண்டுகள் தயாரித்தல் (Silk Ribbon, Stocking Net, Bouquets) புதிய வகுப்புக்கள் 16-4-95 முதல் ஆரம்பமாகிறது தொடர்பு: Yogi Home Science Academy நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் (முத்திரைச் சந்தையடி), நல்லூர். (சி-634)

## வாழ்த்து மடல்கள்

புத்தாண்டு வாழ்த்து மடல்கள், இரகுநாதையர் பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும். 94 ஆம் ஆண்டு உயர்கல்வி வெளியீடு, விலங்கியல் A/L 'பாஸ் பேப்பர்' வர்த்தகம் நிதியியலும் வெளிவந்து விட்டது. பாமிலன், ஸ்ரீகாந் யாழ் நல்லூர். [சி-644]

## கோழிக் குஞ்சுகள்

தரித்த வளர்ச்சியடையும், [Loman] சேவல் குஞ்சுகள் 30-03-95இல் விநியோகிக்கப்படும். குஞ்சொன்றின் விலை ரூபா 15/- முன் கூட்டியே பதிவு செய்தவர்களும் பெற்றுக்கொள்ளலாம் மல்வம் வீதியூடாக சிங்கம் வீதி. உடுவில். [35892]

## பயிற்சி வினாத்தாள்கள்

முதலாம் தவணைப் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் ஆண்டு 3 தொடக்கம் O/L வரை எல்லாப் பாடங்களுக்கும் யாழ். Bond கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன எல்லா பிரபல புத்தக நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (8390)

## புலமைப் பரிசில் - 95

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பொது உளச்சார்பு, பொது அறிவு பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும் 2வது, 4வது ஞாயிற்றுக்கிழமையிலும் ஊக்குவிப்பு பயிற்சிகள் ஒவ்வொரு வாரமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. நேரில் / தபாலில் / பிரபல புத்தக நிறுவனங்களில் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (8357)

## கணக்கியல்

G.C.E A/L கணக்கியல் Past Paper 1980—1994வரை சரசு பப்ளிகேசன் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் [சி-641]

## கனடா நாடகப் பரிசு

கனடா, ரொறன்ரோ ஆசிய வானொலி நிலையத்தின் தமிழ்ப் பிரிவு நடத்திய நாடகப் போட்டியின் முதலாம் பரிசு பெற்ற அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாவல் 'அக்கரைச் சீமையில்' பூபாலசிங்கம், புத்தகசாலை. [35611]

## உள்நாட்டு தபால்களே அதிகம்

'கோமாரி' கப்பலில் இம்முறை வந்து சேர்ந்த தபால் பொதிகளில் உள்நாட்டுக் கடிதங்களே மிக அதிகமாக அனுப்பிருந்தன [8 8]

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மணம்வீசும் மலராக: 15 — 06 — 1945

மணம்ஏற்ற வாடியது: 25 — 02 — 1995

### அமரர் தம்பையா நவரத்தினராசா

உடலாலே பிரிந்த நீங்கள்
எமதுள்ளத்தினுள் வாழ்கின்றீர்கள்
கடலாறு கதறுமாப்போல
நாம் காலமெல்லாம் கதறுகின்றோம்
இடியேறு கேட்ட நாகம்போல
நாம் இடை விடாது துடிக்கின்றோம்
எமது துயர் தீர்ப்பதற்கு
காலனிடம் ஒளித்தேனும் வந்திடஐயா!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்
உறவினர்கள்.

''நந்தினி வெதுப்பகம்''
கொக்குவில் மேற்கு. (35902)

## 15 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 13 — 11 — 1888

மறைவு: 26 — 03 — 1980

### அமரர் நயசிவாயம தம்பு

(நிலஅளவையாளர்)

திதி: 27-03-1995

பதினைந்தாண்டு சென்றாலும்
நீங்கள் மறைந்து போனது
நீங்கிடுமா நின நினைவுகள்
வலத்திருக்கும் ஐயா.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கோப்பாய். (35873)

## வருடாந்த நினைவஞ்சலி



தோற்றம்: 02 — 04 — 1910

மறைவு: 03 — 04 — 1970

அமரர்

### ஆ. மார்க்கண்டன் B. A., B. Sc.

Post Graduate Trained (P. G. T.)

திதி: 27 — 03 — 1995

(ஓய்வு பெற்ற கல்லூரி அதிபர், ஆலோசகர் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம், பாடவிதான அபிவிருத்திச் சபை, முன்னைநாள் தலைவர் - அகில இலங்கைக் காந்திய சேவா சங்கம்)

விண்ணதனி லுடுக்கணத்தி நிடைவிளங்குந் - தண்மதிபோல்
விளங்கியென்றும்
நண்ணலரும் போற்றவுயர் நன்னெறிக்கே - யிலக்கியமாய்
நடந்து காட்டிப்
புண்ணியர்கள் பலர் போற்றப் புதுமை நெறி - சார்புநெறி
பொருந்தி வாழ்ந்து
பண்ணிய நற் பயிர்வளர்த்த, ஆசிரியப் - பெருந்தகையே
பண்பின் மிக்கோய்.

தங்களை என்றும் அன்புடன்
நினைவு கூரும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர் மற்றும் நண்பர்கள்.

மா. திருவாசலூரன்,
சட்டத்தரணி,
''சிவநிகேஸ்வரி பவனம்'',
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம். (8-329)

---

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 18 — 10 — 1929

மறைவு: 07 — 04 — 1994

### திருமதி மோட்சியவதி தங்கத்துரை

திதி: 27 - 03 - 1995

பண்போடும், பாசத்தோடும் எம்மை வளர்த்து ஆளாக்கிய எம் அன்பு அன்னையே! நீங்கள் எம்மைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது.

உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
சி. தங்கத்துரை (கணவன்)
த. சரவணபவன் (மகன்)

''பொன்னம் தோட்டம்''
துன்னாலை தெற்கு,
கரவெட்டி. (35815)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 17 — 08 — 1926

மறைவு: 25 — 02 — 1995

### அமரர் பொன்னர் கனகசபை

[கார் சாரதி]

25-02-95 அன்று மறைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் நோய்வாய்ப்பட்டிருந்தபோது உதவியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று [27-03-95] திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திக் கிரியைகளில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வடலித் தோட்டம்,
மானிப்பாய் வடக்கு. [8298]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி

### குமாரசுவாமி மனோன்மணி

(பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி)

பிறப்பு: 03 — 07 — 1928

இறப்பு: 25 — 02 — 1995

இன்று (27-03-95) திங்கட்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் பங்குபற்றும்படி உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கனகசபை குமாரசுவாமி (கணவன்),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல 8, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி,
[illegible] [35820]

---

முருகண்டிப் பகுதியில் உள்ள

# கடைகளில் சுகாதாரம் பேணுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 27

முருகண்டிப் பகுதியில் இயங்கி வரும் சாப்பாடு மற்றும் தேநீர் கடைகள் அடிப்படைச் சுகாதார வசதிகள் இன்றி சுகாதாரச் சீர்கேடான முறையில் இயங்கிவருகின்றதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இப்பகுதிக் கடைகளில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்ட கிளிநொச்சி மாவட்ட பதில் உணவு மருந்து பரிசோதகர் திரு. ரி. மகாதேவன் இந்த நிலைமைகளைக் கண்டறிந்துள்ளார்.

இக் கடைகள் யாவும் சுகாதாரமான முறையில் மீள அமைத்துக் கொள்வதற்கு கடை உரிமையாளர்களுக்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னர் வவுனியா பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ் முருகண்டி பகுதி இருந்து வந்தது. தற்போது கிளிநொச்சிக்கென தனியான பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்திய கலாநிதி கே. சிவகுரு பொறுப்பேற்றுள்ளதையடுத்து சுகாதார கண்காணிப்புக்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (ஒ-4)

# வடமராட்சி கிழக்கில் குன்றும் குழியுமான வீதி

தென்மராட்சி, மார்ச் 27

வடமராட்சி கிழக்கு உடுத்துறையிலிருந்து பருத்தித்துறை செல்லும் வீதியில் அம்பன் வரையும், பளை செல்லும் வீதியில் புதுக்காட்டுச் சந்தி வரையும் வீதிகள் குன்றும் குழியுமாக உள்ளன.

வீதியில் பாரிய குழிகள் காணப்படுவதால் வாகனங்கள் சேதமடைவதாகவும், விறகு வியாபாரிகள் இவ் வீதியில் விழுந்து எழும்பி பெரிதும் கஷ்டமுறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ் வீதிகள் தாளையடி பங்குத் தந்தையின் உதவியுடன் இரு வருடங்களுக்கு முன்னர் இப் பகுதி மக்களால் சிரமதான முறையில் களிமண் பறித்து செப்பனிடப்பட்டன.

கடந்த மழையின் பின்னர் மீண்டும் வீதிகள் சேதமடைந்துள்ளன. (ஐ-117)

## வைத்திய சேவை

தென்மராட்சி மார்ச் 27

பளை பளை தென்னை வள அபிவிருக்கிக் கூட்டுறவுச் சங்க சித்த மருத்துவப் பிரிவினர் நடமாடும் வைத்திய சேவையினை பச்சிலைப்பள்ளிப் பகுதி கிராமங்களில் நடத்திவருகின்றனர்.

தினமும் பிற்பகலில் ஒவ்வொரு கிராமத்திலும் வைத்தியச் சேவை நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது.

---

உ.
சிவமயம்
கந்தர்மடம் - ஆத்திசூடி வீதி
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்
நடத்தும்

## "தமிழ் மகள்" ஔவையார் விழா - 1995

இரு தினங்கள் இன்றும், நாளையும்.
முதல் நாள் இன்று
**27-3-95 திங்கட்கிழமை மாலை 6-00 மணி**

★ மங்கள இசை
சிவதாஸ் குழுவினர்
(உபயம் சி. கி. மகாலிங்கம், கந்தர்மடம்)

★ மங்கள விளக்கேற்றல்
திரு. க. கனகராஜா
(மில்க்வைற் அதிபர்)

★ தமிழ்த்தாய் வாழ்த்து
திரு. தி. கருணாகரன்
(விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலை மன்றம்)

★ மௌன அஞ்சலி

★ தலைமை
திரு க. சிவராமலிங்கம் (B.A)
(முன்னாள் உபஅதிபர், யாழ். இந்துக்கல்லூரி)

★ வரவேற்புரை
செல்வன் க. குணாளன்

★ தலைமை உரை

★ அருளுரை
திரு இ இராமலிங்கசர்மா
(ஆலயப் பிரதமகுரு)

★ ஆசியுரை
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(குரு முதல்வர், நல்லை ஆதினம்)

★ தொடக்கவுரை
கலாநிதி நா. சுப்பிரமணியன்
(முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)

★ சொற்பொழிவு
''தமிழ் மகள்''
நிகழ்த்துபவர்: தமிழருவி த. சிவகுமாரன்
(அமைப்பாளர், காரைநகர் கம்பன்கழகம்)

★ சிறுவர் நிகழ்ச்சி

★ கதாப்பிரசங்கம்
'ஔவையாரும் பிள்ளையாரும்'
செல்விகள் சுபாஜினி தர்மராஜா
வேதாரணி கந்தசாமி

★ பட்டிமண்டபம்
யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள்
பொருள்: தமிழ் உலகில் ஔவையார் பாடல்களுக்குத் தனியிடம் கிடைத்தமைக்குப் பெரிதும் காரணம், அவற்றின்
எளிய இனிய தமிழ்நடையே! கருத்துச்செறிவே!
செல்வன்கள்
ஜெ. ஜெயகாந்தன் இ. செந்தூர்ச்செல்வன்
சி. சிவசாம்பவன் லோ. துஷிகரன்
த சிவகுமார் இ. செல்வமனோகரன்
நடுவர்: திரு. பொ. செ திருநாவுக்கரசு (M. A)
(ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

★ வில்லிசை
"தமிழ் மூதாட்டி ஔவை"
வில்லிசைக் கலாநிதி
எஸ். எஸ். சர்மா அவர்களின்
ஸ்ரீதேவி வில்லிசைக்குழு

● போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் நாளை பரிசில் வழங்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(35899) — விழாச் சபையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## மூன்று முடிச்சு!

இனப்பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும். எனினும் இதனைத் தீர்ப்பதற்கு கால எல்லை எதனையும் நிர்ணயிக்க முடியாது.

இவ்வாறு புதுடில்லியில் வைத்துச் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா.

இனப்பிரச்சினைக்கு உகந்த — தமிழர்கள் ஏற்கக் கூடிய — ஓர் அரசியல் தீர்வை காண்பது இலகுவானதல்ல; விரைவில் எட்டப்படக் கூடியதல்ல என்பதனை சந்திரிகா புதுடில்லியில் வைத்தாவது உணர்ந்திருப்பது பரவாயில்லை!

இதேவேளை —

ஸ்ரீலங்காவின் புதிய அரசமைப்பின் முழுமையான வடிவம் ஜூலை பதினொன்றுக்கு முன்னர் இயற்றப்பட்டு விடும் என்று ஜனாதிபதியே கால எல்லை நிர்ணயித்திருக்கிறார்.

புதிதாகக் கொண்டுவரப்படும் அரசமைப்பில், இனப்பிரச்சினைக்குக் காணப்படும் தீர்வும் உள்ளடக்கப்பட்டு அது உறுதி செய்யப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.

இனப்பிரச்சினைக்குக் காணப்படும் தீர்வை அரசமைப்பில் சேர்க்க வேண்டும் என்பதில் அரசாங்கமும் ஆர்வம் காட்டுகிறது.

இங்கேதான் பெரும் சிக்கலான நிலை தோன்றுகிறது!

அரசமைப்பை இயற்றுவதற்குக் கால எல்லை; இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு கால எல்லை இல்லை; ஆனால் இனப்பிரச்சினைக்கான தீர்வு புதிய அரசமைப்பில் சேர்க்கப்படவேண்டும்; இந்த மூன்றும் ஒன்று சேர்த்து முடிச்சுப் போடப்பட்டுள்ளது. இது அவிழ்க்க முடியாத மிகவும் பலமான, சிக்கலான முடிச்சு.

ஆகையால்—

புதிய அரசமைப்பில் இனப்பிரச்சினைத் தீர்வைச் சேர்ப்பதில்லை; அல்லது புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு கால எல்லை நிர்ணயிப்பதில்லை; அல்லது இனப் பிரச்சினைத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு கால எல்லையை நிர்ணயிப்பது.

மேற்சொன்ன மூன்று மாற்றங்களில் ஒன்றையேனும் அரசு செய்தாலேயே இந்தப் பெரும் சிக்கலிலிருந்து விடுபடலாம். மூன்று முடிச்சை அவிழ்த்துத் தப்பலாம்.

மீசைக்கும் ஆசை கூழுக்கும் ஆசை என்ற நிலை ஆகாது. ஒன்றில் மீசையை மழிக்க வேண்டும்; இல்லையேல் கூழ் குடிப்பதை நிறுத்த வேண்டும். இரண்டையும் கைவிட விருப்பம் இல்லையெனில் குடிக்கும் கூழில் அரைவாசி மீசையில் அடைந்து அதனை அலங்கோலப்படுத்தவே செய்யும்!

சந்திரிகா மூன்றில் எதனை கைவிடப் போகிறார்; அல்லது மாற்றம் செய்யப் போகிறார்?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு கால வரம்பு போட முடியாது என்பதனை ஜனாதிபதி உணர்ந்திருக்கிறார். அதனை மறந்து கால எல்லை விதித்தாலும் அவரால் அதனைச் சாதிக்க முடியாது.

அரசமைப்பை இயற்றுவதற்கு விதித்த கால அவகாசத்தையும் நீடிக்க இயலாது. காரணம் — 1995 ஜூலைக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து புதிய அரசமைப்பைக்கொண்டு வருவதாக ஜனாதிபதி தேர்தலின்போது முற்போக்கு முன்னணி வேட்பாளருக்கு அறுதியிட்டுச் சரணடைந்தே சந்திரிகா தேர்தலில் வென்றார்!

அந்த விடயத்தில் மாற்றம் எதுவும் செய்யப் போனால், தெற்கில் இளைஞர் புரட்சி, கிளர்ச்சி ஒன்றை விலைக்கு வாங்குவதாக முடியும்!

எனவே இனப்பிரச்சினைக்குக் காணப்படும் தீர்வை புதிய அரசமைப்பில் சேர்ப்பதில்லை என்ற முடிவுக்கு வருவதே சந்திரிகாவுக்கு உள்ள ஒரே ஒரு மாற்றுவழி!

அத்தகைய ஒரு நிலையில், தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைப் புறந்தள்ளி அரசியல் தீர்வை ஆராய்வதற்கு அவசரப்பட வேண்டிய தேவையே இல்லை! முதலில் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினையை விரைந்து தீர்த்து, அதனைத் தொடர்ந்து அரசியல் தீர்வைக் காண விரைந்து வேகமாக உழைக்கலாம்.

---

### இலங்கையின் அரசமைப்பு வரலாற்றுப் பின்னணியில்

# அரசு முன்வைக்கும் தீர்வுத் திட்டத்துக்கு அரசமைப்பு உத்தரவாதம் சாத்தியமாகுமா?

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அண்மையில் நடந்த முழு நிலா நாள் கருத்தரங்கில்—

"புதிய அரசாங்கத்தின் புதிய அரசமைப்பு விவகாரமும், ஈழத் தமிழர் பிரச்சினையும்' என்ற தலைப்பில் திரு. மு. திருநாவுக்கரசு ஆற்றிய உரையின் தொகுப்பின் முதல் பகுதி கடந்த 19ஆம் திகதி உதயனில் வெளியானது. தொகுப்பின் இரண்டாவது பகுதி இன்று பிரசுரமாகுகிறது.

காட்டுமிராண்டித்தனமானதும் இறுக்கமானதுமான ஒரு சமஷ்டி அலகினை இந்தியாவில் வெள்ளையர்கள் தோற்றுவித்தனர்.

அதன் துயரம் என்ன என்றால் இந்தியாவின் பிற்கால சமஷ்டியின் அடிப்படையாக அதுவே அமைந்ததுதான்.

பரந்த இந்தியாவை ஆள்வதற்கு நிர்வாக ரீதியாக தனிப்பட்ட அலகுகள் தேவை. எனவே அதை உருவாக்கினார்கள். அந்த உருவாக்கமே இந்திய சமஷ்டியின் அடிப்படை ஆனது.

அதனை உருவாக்கியபோது வெள்ளையர்கள் இரண்டு விடயங்களைப் பின்பற்றினர்.

இந்தியர்கள் வெள்ளையர்கள் அல்லாத காரணத்தால் இறுக்கமான நடைமுறைகளை பின்பற்றினார்கள்.

பிரித்தாளும் தந்திரத்தைப் பிரயோகித்தால்தான் பெரிய இந்தியாவை தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்க முடியும்.

எனவே பல இனங்களை ஒன்று சேர்த்து ஒரு பிரதேச ஆட்சி அலகை பிரித்தானியர்கள் தோற்றுவித்துவிட்டனர். அவர்கள் தோற்றுவித்த பஞ்சாப் அலகை எடுத்துக் கொண்டால் பஞ்சாபில் இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் என்ற மூன்று இனங்களை ஒன்றிணைத்து ஒரு ஆட்சி அலகைத் தோற்றுவித்தனர்.

பஞ்சாபி, ஹிந்தி, உருது மூன்று மொழியையும் ஒரு மாநிலத்துக்குள் இணைத்துவிட்டனர். மத ரீதியாக அவர்கள் மோதிக்கொள்ளட்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள்.

எனவே அங்கு மக்களை மோதவிட்டு தமது அதிகாரத்தைச் செய்வது சாத்தியம் ஆனது.

1947ஆ ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்தது. சுதந்திரமடைந்தபோது பஞ்சாபில் முஸ்லிம்கள் வாழும் பகுதி பாகிஸ்தானுக்குள் போனது. ஒரு பகுதி ஹரியானா என்ற பெயரில் ஹிந்தி அரசாகப் பிரிந்தது. மறு பகுதி பஞ்சாப் என்று ஒரு மொழிவழி மாநிலமாகப் பிரிந்தது.

இந்த நடைமுறை அனுபவத்தினூடாக இந்தியர்கள் பின்னர் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

பிரித்தானியர்களின் நிர்வாக அலகுகளை தேசிய இன அடிப்படையிலான அலகுகளாகப் பிரித்தல் என்ற ஆலோசனையை பணிக்கர் விசாரணைக் கமிஷன் முன்வைத்தது.

அதன்படி இந்தியா மொழிவழி மாநில அமைப்பு என்ற அரசமைப்பை உருவாக்கியது.

முன்னைய இரத்தம் தோய்ந்த அனுபவத்தின் ஊடாகவே இந்த முடிவுக்கு இந்தியர்கள் வந்தார்கள். அவ்வாறு வந்தும் கூட பிரித்தானியர்களால் அமைக்கப்பட்ட சட்ட ஏற்பாடுகள் புதிய அரசுகளால் அப்படியே பேணப்பட்டன.

வெள்ளையர்கள் எப்படி மாநிலத்தையும், மத்திய அரசையும் இணைத்தார்களோ அந்த இணைப்பு முறை அப்படியே பின்பற்றப்பட்டது.

ஏனென்றால் மத்திய அரசு மாநில அரசுகளை இறுக்கமாக கட்டி வைத்திருப்பதற்கு ஏற்ற அனுபவத்தைத்தான் இந்தியர்கள் வெள்ளையர்களின் ஆட்சியின் போது பெற்றார்கள்.

> ...டொனமூர் குழுவினரால் உருவாக்கப்பட்ட இலங்கையின் அரசமைப்பு அரசியல் அதிகாரத்தை நிரந்தரமாக பெரும்பான்மையினரின் கையில் தாரை வார்த்துக் கொடுத்தது...

அந்த சமஷ்டிக்கு இன்று கொடுக்கப்படும் பெயர் அரைச் சமஷ்டி.

தேசிய இனப்பிரச்சினை இல்லாத அமெரிக்காவில் — ஒரு இனத்தைக் கொண்டவர்களிடையே மாநில அரசுகளை உருவாக்கியபோது முழுச் சமஷ்டி உருவாக்கப்பட்டிருக்கிறது.

தேசிய இனப் பிரச்சினைகள் நிறைந்த இந்தியாவில் முழுச் சமஷ்டி உருவாக்கப்படாமல் அரைச் சமஷ்டி உருவாக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக அரசமைப்புத் திட்ட நிபுணர்கள் மேலைத்தேச கல்வியைக் கற்று, மேலைத்தேச முறையின் கீழ் அவர்களின் வார்த்தைகளைப் பிரயோகிப்பதும், அத்தகைய சிந்தனைகளுக்கு உட்பட்டு கருத்துக்களைச் சொல்வதுமே இயல்பும் வழக்கமும் ஆகும்.

நாம் இதிலிருந்து முற்றிலும் மாறுபட வேண்டும்.

எந்த ஒரு அரசமைப்பும் அந்த நாட்டின் இறைமைக்கு ஏற்ப உருவாக்கப்படுவது. அந்த நாட்டின் பிரச்சினைகளில் இருந்து தோன்றுவது. அதை அப்படியே எவரும் பின்பற்ற முடியாது. பின்பற்றவும் கூடாது.

வேறொரு நாட்டின் அரசமைப்பில் இருக்கின்ற ஒரு சுலோகத்தை ஒரு சூத்திரமாகப் பயன்படுத்தி இன்னொரு நாட்டில் போட முடியாது.

சமஷ்டி என்பது ஒரு சூத்திரமல்ல என்பதே எனது முக்கிய கருத்தாகும்.

#### சோவியத்தின் சமஷ்டிமுறை

சோவியத் யூனியன் ஜேர்மனியிடமிருந்து சில அனுபவங்களைப் பெற்று சமஷ்டி அமைப்பை உருவாக்கியது. லெனின் காலத்தில் அது அங்கு உருவாக்கப்பட்டது.

உலகில் இதுவரை தோன்றிய சமஷ்டி அலகுகள் அனைத்தையும் விட சோவியத் யூனியனில் தோன்றிய சமஷ்டி பயனுள்ளதாகவும், புதினமானதாகவும் இருந்தது.

ஏனெனில் உணர்வு பூர்வமாக— தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக— அந்த அமைப்புமுறை கண்டுபிடிக்கப்பட்டது.

பெரும்பான்மை இனத்தவர்களான ரஷ்யர்களினால் ஏனைய இனங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற உணர்வுடன் கண்டு அறியப்பட்டதே அந்த சமஷ்டித் திட்டம்.

அதன்படி—

1918ஆம் ஆண்டு பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சோவியத் யூனியனில் சமஷ்டி அலகுகள் ஏற்படுத்தப்பட்டன.

உண்மையிலே 1918ஆம் ஆண்டு பின்லாந்து, பைலோ ரஷ்யா, உக்ரேய்ன் ஆகிய தேசிய இனங்கள் பிரிந்து சென்றன. பின்னர் 1921ஆம் ஆண்டில் உக்ரெய்னும், பைலோ ரஷ்யாவும் மீண்டும் இணைந்து கொண்டன.

உலகில் பிரிந்து செல்லும் உரிமை அங்கீகரிக்கப்பட்ட முதல் யாப்பு சோவியத்யூனியனில்தான். அதன்படி சில தேசிய இனங்கள் நடைமுறையில்பிரிந்து சென்றன. பின்பு இணைந்தன.

ஆனால் அந்த அமைப்பு ஒரு குறுகியகாலமே நீடித்தது. ஏழு ஆண்டுகளின் பின் லெனின் காலமானார்.

அதன்பின் சோவியத்தில் மத்தியமயப்படுத்தப்பட்ட இறுக்கமான ஆட்சியின் கீழ் ஏனைய இனங்கள் துன்பப்பட்டன. நசுக்கப்பட்டன. அதனால் சோவியத் யூனியனில் இருந்து இன்று பல இனங்களும் துண்டு துண்டாக உடைந்தன.

சிறந்த சமஷ்டி அமைப்புக்கு சோவியத்யூனியன் எவ்வளவுக்கு முன்னுதாரணமாக இருந்ததோ அவ்வளவுக்கு பின் உதாரணமாகவும் இருக்கிறது.

சோஸலிஸ்டுக்களால் உருவாக்கப்பட்ட சமஷ்டி "மாதிரி" (Model) இன்று தோல்வியில் முடிந்துள்ளது.

முதலாளித்துவ அரசமைப்பைக் கொண்டவர்களால் உருவாக்கப்பட்ட சமஷ்டி "மாதிரி" (Model) கணிசமான அளவு வெற்றி பெற்றுள்ளது

எமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட இருப்பதாகக் கூறப்படும் —பண்டா செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையிலான— தீர்வை பரிசீலனை செய்வதற்கு முன்னர்—

இங்கு நடைமுறையில் இருக்கின்ற அரசியல் அமைப்பின் பண்பாட்டினை, மரபினைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

★ பிரித்தானியர்களால் இந்தப் பிரச்சினை எவ்வாறு சிந்திக்கப்பட்டது?

★ சிங்கள ஆட்சியாளர்கள் இதனை எவ்வாறு பயன்படுத்தினார்கள்?

#### டொனமூர் அரசமைப்பு

பிரித்தானியர்கள் இலங்கையில் உருவாக்கிய டொனமூர் அரசமைப்பு பெரும்பான்மை இனம் அரசியலில் ஏகப்பெரும் சக்தியாக நிலைக்கும் அடிப்படையைக் கொண்டிருந்தது.

டொனமூர் குழுவினரால் உருவாக்கப்பட்ட இலங்கையின் யாப்பு அரசியல் அதிகாரத்தை நிரந்தரமாக பெரும்பான்மையினரின் கையில் தாரை வார்த்துக் கொடுத்தது.

இதிலிருந்து தான் பிற்காலத்தில் அரசமைப்பு விவகாரம் பற்றிய சர்ச்சைகள் எழப்போகின்றன.

#### வெள்ளையரின் தந்திரம்

வெள்ளையர்கள் எப்பொழுதுமே பிரித்தாளும் தந்திரத்தைக் கொண்டவர்கள்.

பெரும்பான்மை இனத்தவருக்கு எதிராக சிறுபான்மையினரை அணைப்பதும்—

சிறுபான்மையினருடன் பெரும்பான்மையினரை மோத விடுவதும் அவர்களது இயல்பு

ஆனால் இலங்கையில் அவர்கள் சிறுபான்மை இனத்தவருக்கு பதிலாக ஏன் பெரும்பான்மை இனத்தவரை அணைத்தார்கள் என்ற கேள்வி எழுவது இயல்பு.

1920 ஆம் ஆண்டுகளில் அரசியலில் இரு பிரதானமான அம்சங்களை காணலாம்.

தொகுப்பு:
**நல்லூர் தாஸ்**

இந்தியாவில் ஏற்பட்ட தேசிய விடுதலைப் போராட்டம் யாழ்ப்பாணத்தின் ஊடாக இலங்கை முழுவதும் பரவப்போகின்றது என்ற அச்சம் அப்போது பிரித்தானியருக்கு ஏற்பட்டது.

மலேசியாவின் ஒரு பகுதியாக இருந்த சிங்கப்பூரை துறைமுகத் தேவையின் நிமித்தம் ஒரு தனியரசாக அவர்கள் பிரித்தனர்.

திருமலை துறைமுகத்தைக் கொண்ட இலங்கை இந்திய விடுதலைப் போராட்டத்தின் காரணமாக— யாழ்ப்பாணத்தின் ஊடாக—இந்தியாவுடன் இணைக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் பிரித்தானியர்களுக்கு ஏற்பட்டது.

காந்தியின் வருகை, நேருவின் வருகை, கதர் ஆடைகளை அணிதல் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தோன்றிய "இந்தியப்பற்று" என்பனவற்றின் காரணமாக—

யாழ்ப்பாணம் இந்தியாவின் வாசல்படி என்றும், காந்தியப் போராட்டத்தை இலங்கை முழுவதும் பரப்பப் போகின்ற ஒரு சக்தி என்றும் பிரித்தானியர்கள் எண்ணினார்கள்.

எனவே சிங்களவர்களை இந்தியாவின் மாயையில் இருந்து பிரிக்கவேண்டும் என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர்.

அதனால்தான் —

சிங்களவர்களைத் திருப்திப்படுத்தும் விதத்தில்—இந்தியாவோடு சேர்ந்திருந்தால் உங்களுக்குக் கிடைக்கக் கூடியதை விடவும் அதிகமாக நாங்கள் உங்களுக்குச் செய்வோம் என்ற நம்பிக்கையை கொடுக்கக் கூடியதுமான அரசமைப்பை டொனமூர் குழுவினர் உருவாக்கினர்.

#### ஜே. ஆரின் கடிதம்

இந்தியாவின் ஒரு சமஷ்டி மாநிலமாக இலங்கையை சேர்த்துக் கொள்ள இலங்கை காங்கிரஸ் விரும்புகிறது; நீங்கள் அதற்குத் தயார் என்றால் நாம் உங்களுடன் சேருகிறோம் என்று இலங்கைக் காங்கிரஸின் சார்பில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா இந்தியக் காங்கிரஸிக்கு அப்போது கடிதம் ஒன்றைக்கூட எழுதியிருந்தார்.

> ...சிங்கள நாடாளுமன்றத்தின் கீழ் மாற்றப்படக் கூடிய எந்த அரசமைப்பு ஏற்பாடுகளும், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வான சிறந்த அரசமைப்பு ஏற்பாடுகளாக ஒருபோதும் இருக்க முடியாது...

வெள்ளையர்களால் இதனையெல்லாம் சகிக்க முடியவில்லை.

எனவே— இந்தியாவையும் இலங்கையையும் பிரிப்பதற்கான நடவடிக்கையாக—

சிங்கள மக்களுக்கு அதிக சலுகைகள் உள்ள அரசமைப்பை உருவாக்குவதுதான் ஒரேயொரு சிறந்த வழி என்கிற முடிவுக்கு வெள்ளையர்கள் வந்தனர்.

எனவே சிங்கள மக்களுக்கு சாதகமான ஒரு அரசமைப்பை டொனமூர் உருவாக்கினார்.

அந்த அரசமைப்பின் அடிப்படைதான் இன்று வரையான இலங்கையின் அரசமைப்பின் முழு வளர்ச்சியும் ஆகும்.

ஏனைய இனங்களின் ஆலோசனைகளோ, ஏனைய இனங்களின் வாக்குகளோ, ஏனைய இனங்களின் பலமோ தேவையில்லாத வகையில் சிங்கள மக்களை மட்டும் முழுப் பலசாலிகளாக்கும் அரசமைப்பை டொனமூர் உருவாக்கினார்.

இந்தப் பின்னணியில்—

இலங்கையின் அரசமைப்புகள் சிறுபான்மை இனங்களின் உரிமைகள் தொடர்பாக உத்தரவாதம் உள்ளவைகளா?

முன்பு அவ்வாறு இருந்தனவா அல்லது இருக்க முடியுமா?

சோல்பரி அரசமைப்பின் 29ஆவது சரத்தின் கீழ் தமிழ் மக்களுக்கு எதிரான அல்லது ஏனைய மதங்களுக்கு எதிரான ஒரு சட்டத்தினை இலங்கை நாடாளுமன்றம் பிறப்பிக்க முடியாது.

சோல்பரி அமைப்பின் 29 ஆவது சரத்தின் கீழ் தனிச் சிங்களச் சட்டத்தைக் கூட இந்த நாட்டில் நிறைவேற்றியிருக்க முடியாது.

ஆனால் 1956 ஆம் ஆண்டு சோல்பரி அரசமைப்பு அமுலில் இருந்த வேளை சிங்களவர்கள் அந்த அரசமைப்பின் விதியை முற்று முழுதாக மீறி தனிச்சிங்களச்சட்டத்தை கொண்டு வந்தனர்.

எனவே அரசமைப்பின் உத்தரவாதங்கள் எப்போதும் தமிழ் மக்களுக்கு உத்தரவாதமாக அமைய முடியுமா?

தமிழ் மக்களுக்கு எதிராக இரு சிங்களக் கட்சிகளும் இணைந்து வாக்களிக்கும் தன்மை இலங்கையில் எப்போதும் உண்டு.

சோல்பரி 29ஆவதுசரத்தை தமது அரசமைப்பில் உருவாக்கியதற்கு வேறு பின்னணியும் உள்நோக்கமும் உள்ளன.

பௌத்த மதம் ஏனைய மதங்களை நசுக்கி விடுமோ என்ற அச்சம் அன்றைய நிலையில் அவர்களிடம் இருந்தது. ஏனைய மதம் என்று அவர்கள் கருதியது கிறிஸ்தவம் சம்பந்தப்பட்ட விடயம் தான்.

கிறிஸ்தவ மதத்துக்கு பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காகத்தான் சோல்பரி 47ஆம் ஆண்டு அரசமைப்புத் திட்டத்தில் சிறுபான்மையினரின் பாதுகாப்பு எனக் கூறிக்கொண்டு 29ஆவது சரத்தை கொண்டு வந்தாரே தவிர அது தமிழர்களுக்காக அல்ல.

அப்போது இலங்கையில் இருந்த ஐரோப்பிய மக்களுக்காகவும், கிறிஸ்தவர்களுக்காகவுமே அந்த சரத்தை சோல்பரி உருவாக்கினார். (மன்னிக்க வேண்டும் எந்த வகையிலும் கிறிஸ்தவ மக்களுக்கு எதிரான கருத்தை நான் அணுவளவும் கொண்டவனல்ல)

சோல்பரி தமிழர்களுக்காகவே அந்த சரத்தை உருவாக்கினார் என்றுதான் அந்தக் காலத்தில் இருந்த எமது தலைவர்கள் நம்பினார்கள்.

அதனால் வெள்ளையர்கள் எங்களை ஏமாளிகளாக நினைத்தார்கள். பித்தர்களாக எண்ணினார்கள்.

#### உத்தரவாதம் சாத்தியமா?

இத்தகைய ஒரு நீண்ட அரசமைப்பு வரலாற்றுப் பின்னணியில் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு முன் வைக்கப்பட்டால் அரசமைப்பு ரீதியான உத்தரவாதம் [Constitutional Guarantee] சாத்தியமாகுமா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரு புதிய அரசமைப்பை அரசு கொண்டு வந்தாலும் அதில் உத்தரவாதத்தை (Guarantee) ஏற்படுத்த முடியுமா?

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு அல்லது நான்கில் மூன்று பெரும்பான்மை பலத்தின் மூலம் அரசமைப்பை மாற்றமுடியும்.

சந்திரிகா அரசு அரசமைப்பில் ஆகக்கூடிய அளவிலான நெகிழும் தன்மையை உருவாக்க விரும்பினால் நான்கில் மூன்று பெரும்பான்மை மூலம் ஏற்படுத்தலாம்.

நாடாளுமன்றத்தில் நான்கில் மூன்று பெரும்பான்மை என்பது தமிழர்கள் இல்லாமலேயே எப்போதும் இருக்கக் கூடியதே.

எனவே — சிங்கள நாடாளுமன்றத்தின் கீழ் மாற்றப்படக் கூடிய எந்த அரசமைப்பு ஏற்பாடுகளும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான சிறந்த அரசமைப்பு ஏற்பாடுகளாக ஒருபோதும் வரமுடியாது!

அரசமைப்பின் பாதுகாப்பு ஏற்பாடுகளை மீறித்தான் 1972ஆம் ஆண்டில் பௌத்த மதத்தை ஏறக்குறைய அரச மதமாக்கிய அரசமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது.

எனவே எந்தக் காலத்திலும் எப்படியும் அவர்கள் அரசமைப்பை மாற்றுவார்கள். இன்றைய அரசமைப்பை நாளை ஆட்சிக்கு வருபவர்களால் மாற்ற முடியும்.

ஆகவே அரசமைப்பு ரீதியான உத்தரவாதம் என்பது இங்கு எப்படி சாத்தியப்பட முடியும்?

அரசமைப்பு ரீதியான உத்தரவாதத்தை ஏற்படுத்துவது என்றால் என்ன என்பதற்கு வரலாற்றில் சில பதில்கள் உள்ளன. ஆனால் இலங்கையில் அது நடக்கப் போவதில்லை.

— வளரும்.

---

## யாழ். மாவட்டத்தில் மாமரங்கள் பூச்சி தாக்கத்தினால் பாதிப்பு

### தடுப்பு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். மாவட்டத்தில் பூச்சி நோய் தாக்கங்களினால் மாமரங்கள் செழிப்புக் குன்றி காணப்படுவதாக — தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செய்திக் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

இத் தாக்கங்களில் மாவிலைத்தத்தியும் ஒன்றாகும். இது பரவலாக, அதிகளவில், யாழ். மாவட்டத்தில் காணப்படுகின்றது.

இத்தாக்கம் கட்டுப்படுத்தப்படா விட்டால் இவ் வருடத்துக்குரிய மாங்கனி அறுவடையில் பெரும் பாதிப்பு ஏற்படும் எனவும் இதனால் உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்தாக்கம் காணப்படும் மரங்களின் இலைகள் மேற்புறத்தில் தத்திகளின் கழிவுகள் கறுப்பு நிறமாக இருக்கும். இலைகளை தட்டினால் தத்திகள் பறப்பதைக் காணலாம்.

தாக்கத்திற்குட்பட்ட பூக்கள் உதிர்ந்து காணப்படும்.

தத்திகள் பூக்களினதும் இளம் குருத்துகளினதும் சாற்றினை உறிஞ்சுவதனால் அவை கருகிக் காணப்படும்.

இத் தாக்கத்தினால் அடுத்து வரும் போகங்களிலும் மாமரங்கள் பயன்பாடு இல்லாதவையாகப் போகலாம்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு லேபேசில் அல்லது 'பென்தயோன்' ஒரு அவுன்ஸ் எடுத்து 3 கலன் நீரில் கலந்து விசிற வேண்டும்.

புதிய துளிர்கள், பூக்கள் தோன்றும் காலங்களில் இவ்வாறு செய்வதன் மூலம் இத் தாக்கத்தை கட்டுப்படுத்தலாம்.

இயற்கையாக கிடைக்கும் காய்ந்த சருகுகள், பழுதித இலைகள் குறிப்பாக வேப்பமிலைகளை மாமரங்களின் கீழ் போட்டு எரிப்பதும் சிறந்தது.

இந்நோய் ஏற்படும் காலங்களில் தேவையற்ற கொப்புகளை வெட்டி விடுவதனால் இத்தாக்கத்தை கட்டுப்படுத்தலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-14)

---

## இந்திய பத்திரிகைகள் முக்கியத்துவம்

புதுடில்லி, மார்ச் 27

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் முதலாவது இந்திய விஜயம் குறித்த செய்திகள் இந்தியாவின் பிரபல பத்திரிகைகளில் முக்கிய இடங்களைப் பிடித்திருந்தன.

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்கு நாடு கடத்துவது தொடர்பான பிரச்சினை இந்திய— இலங்கை தலைவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தையில் உத்தியோகபூர்வமாக ஆராயப்படமாட்டாது என்று பெரும்பாலான பத்திரிகைகள் கருத்து வெளியிட்டிருந்தன.

பேச்சுக்களின் போது பிரபாகரன் தொடர்பான பிரச்சினை எடுக்கப்படமாட்டாது என்று "ரைம்ஸ் ஒவ் இந்தியா" பத்திரிகை தெரிவித்திருந்தது.

(ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல கட்டடப் பொருள்கள் வாணிப நிலையத்தில் களஞ்சியப் பொறுப்பாளர், களஞ்சிய எழுதுநர் பதவியில் பணிபுரியக் கூடிய பொருத்தமானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. இப்பகுதியில் பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:
வி. இல. 771,

**உதயன்**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(35912)

## பொதுக் கூட்டமும் மதியபோசன விருந்தும்

### பழைய மாணவர் சங்கம்
### யா/ கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம்

மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டமும், மதிய போசன விருந்தும் எதிர்வரும் 09 - 04 - 95 ஞாயிறு காலை 9 30 மணிக்கு பாடசாலைமண்டபத்தில் நடைபெற இருப்பதால் அதில் சகல உறுப்பினர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பொன். தர்மேந்திரன்
செயலாளர்

குறிப்பு:
இதுவரை உறுப்பினர்களாகச் சேராதவர்கள் அங்கத்துவப் பணத்தை தனாதிகாரியிடம் செலுத்தி உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ளுமாறும், மதிய போசன விருந்திற்கான ரூபா 50/ செலுத்தி மதிய போசன விருந்தில் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகிறோம்.
(35908)

## மரண அறிவித்தல்கள்

### நல்லதம்பி சுப்பிரமணியம்
(வங்காளி மணியம்)

காரைநகர், சின்னாலடியை பிறப்பிடமாகவும் 8/2 அரசடி லேன், ஐயனார் கோவில் வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி சுப்பிரமணியம் 26 3-95 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நல்லதம்பி தம்பதிகளின் புதல்வனும் முத்தாச்சியின் அன்புக் கணவனும் சிவபாலன், கோபாலன (காரைநகர் தியாகராசா மத்திய மகாவித்தியாலய மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் [27-3-95] இன்று காலை 10 மணியளவில் மேற்படி இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
**மனைவி, பிள்ளைகள்**

தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.
(35909)

### திருமதி
### சிவகுருநாதன் இந்திராணி
(ராணி)

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுருநாதன் இந்திராணி (ராணி) நேற்று (26 - 3 - 95) காலமாகிவிட்டார்.

இவர் சிவநிதி, சிவகரன், சிவாஜினி, கவிந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, பூமணியின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராசா, பாக்கியலெட்சுமியின் அன்பு மருமகளும், ஏகநாயகி, பாக்கியலெட்சுமி, ரதிதேவி, திருவருட்செல்வி, கிருஷ்ணகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தசாமி, தவமணிதேவி, சொர்ணகாந்தி, கேதாரநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (27 - 3 - 95) பி. ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ந. சிவகுருநாதன்
(கணவர்)

No. 26, யாழ் வீதி,
யாழ்ப்பாணம,
(யாழ் ஸ்ரீதர் திரை அரங்கு அருகாமை வீதி).
(35910)

### திருமதி
### சிவபாக்கியம் நல்லமாப்பாணர்

உடுப்பிட்டி, நவிண்டிலைப் பிறப்பிடமாகவும், மந்துவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் நல்லமாப்பாணர் அவர்கள் நேற்றுக் காலமானார்

இவர் காலஞ்சென்ற நல்லமாப்பாணர் அவர்களின் அன்பு மனைவியும், சிவசுப்பிரமணியம், இராஜேஸ்வரி (ஒய்வுபெற்ற ஆசிரியை, வரணி), சிவப்பிரகாசம், விஜயலட்சுமி மாணிக்கவாசகர், வள்ளிநாயகி (ஆசிரியை, மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வள்ளிநாயகி, காலஞ்சென்ற தாமயில்வாகனம் (பிரதம லிகிதர்), மற்றும் மனோரஞ்சிதம், திரு. மு. நடராசா [காணி உத்தியோகத்தர், கிளிநொச்சி], திருமதி மாணிக்கவாசகர், ம. அருட்சோதிநாதன் (கைக்காளர், கோண்டாவில் இலங்கை போக்குவரத்துச் சபை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27 3 95) திங்கள் பி ப. 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. மாணிக்கவாசகர்
[மகன்]

மந்துவில்,
கொடிகாமம்.
[35911]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27 - 03 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சந்திரிகாவின் சமாதான முயற்சிக்கு இந்தியா ஆதரவு தர வேண்டும்!

## ஆகாசவாணி கருத்தரங்கில் வலியுறுத்து

புதுடில்லி, மார்ச் 27
இலங்கையின் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்குவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தயாராக உள்ளார்.

''அந்நாட்டுத் தமிழ் மக்களுக்கு சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடுமாகும்,

''ஆகையால் சந்திரிகாவின் சமாதான முயற்சிக்கு இந்தியா தனது முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

''இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கு இந்தியா எந்த விதத்திலும் இடைஞ்சலாக இருக்கக்கூடாது எமது உள் வீட்டு விவகாரங்களை இவ் விடயத்தில் கொண்டு சென்று கலக்கக் கூடாது.

— அகில இந்திய வானொலியில் நடைபெற்ற இந்திய — இலங்கை உறவுகள் பற்றிய அரை மணி நேரக் கருத்தரங்கில் மேற்கண்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்தக் கருத்தரங்கில் கொழும்பில் முன்னர் இந்தியத் தூதுவராகப் பணியாற்றிய கே. என். ஜா, புதுடில்லி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மகேந்திரகுமார், லக்னோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் எல். கே. முனி, ''ஹிந்துஸ்தான்'' பத்திரிகையைச் சேர்ந்த டிக்கு ஆகியோர் கலந்து கொண்டனர்.

அந்தக் கருத்தரங்கில் சமாதானப் பேச்சுக்கள் குறித்து தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:-

இலங்கையில் தொடங்கப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் முக்கியமானவை என்பதனைக் கருத்தில் கொண்டு இந்தியா அதனை ஆதரிக்கவேண்டும்

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஜனாதிபதி சந்திரிகா கரிசனையுடனும், விசுவாசத்துடனும் உழைக்கிறார் இது பிரேமதாஸா காலத்து நிலையை விட மிகவும் வித்தியாசமானது.

சந்திரிகா தமிழருக்கு சுயாட்சி வழங்கத் தயாராக இருக்கிறார். அதேபோல அதனை ஏற்றுப் பரிசீலனை செய்வதற்கு விடுதலைப் புலிகளும் தயாராக இருக்கிறார்கள்

இது நிச்சயமாக ஒரு புதிய பரிமாணம் என்பதனை இந்தியா உணர்ந்து கொள்ள வேண்டும்.

மேலும் இலங்கைத் தமிழர் பிரச்சினை, பிரேமதாஸா காலத்தைவிட இப்போது மிகப் பெரிய அளவில் சர்வதேச மயப்பட்டுவிட்டது.

அதனால் சந்திரிகாவும் சரி விடுதலைப் புலிகளும் சரி சமாதான முயற்சிகளில் இருந்து சறுக்க முடியாது. இதுவும் ஒரு புதிய பரிமாணமே. இந்தப் பரிமாணம் காரணமாக சமாதானப் பேச்சுக்கள் தடம்புரளும் சாத்தியம் குறைவு.

இனப்பிரச்சினை விவகாரம் மிகவும் மென்மையானது. அரசியல் தீர்வு இனிமேல்தான் வகுக்கப்படவேண்டி உள்ளது.

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சந்திரிகா சர்வதேச ஆதரவைப் பெறவேண்டி உள்ளது. அதில் அவர் ஈடுபட்டுள்ளார். தமது வெளிநாட்டு அமைச்சரை அமெரிக்காவுக்கு அவர் அனுப்பியதைக் குறிப்பிடலாம்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் இந்தியா தனது உள் வீட்டு விடயங்களைக் கொண்டு போய் செலுத்தி சமாதானத்தை உருவாக்கும் இலங்கையின் உரிமையை மீறவோ தலையிடவோ கூடாது.

இலங்கையின் சமாதான முயற்சிகளை இந்தியா தட்டிக்கொடுத்தும் அதற்கு ஆதரவு தந்தும் அங்கு சமாதானத்தை நிலைபெறச் செய்ய ஒத்துழைப்பு நல்கவேண்டும்— இவ்வாறு கருத்து தெரிவிக்கப்பட்டது. (அ)

### தென்னிலங்கை...
[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

5 கிலோ கந்தகம், 45 வெடிஉப்புகள், 250 கிராம் அமோனியம் என்பவற்றையே பொலீஸார் கைப்பற்றினர்.

பஹலபெலிகல்ல என்ற இடத்திலுள்ள வீடொன்றை கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை சுற்றி வளைத்த பெலியத்த பொலீஸார் அங்கிருந்து நான்கு துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் கைப்பற்றினர்; ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தன்மன்விலைக் காட்டினுள் கொலை வழக்கு ஒன்றை விசாரிக்கச் சென்ற பொலீஸார் அங்கு பெரும் தொகையான ஆயுதங்களையும் தோட்டக்களையும் மீட்டெடுத்தனர். (உ-ஐ-5)

### எழுநூறு---
[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மகோற்சவம் ஆரம்பம்

இதுவரை காலமும் அலங்கார உற்சவமாகக் கொண்டாடப்பட்டதை பங்குனி ரேவதி நாளை இறுதியாகக் கொண்ட 10 தினங்கள் மகோற்சவமாக ஆரம்பித்து வைத்த பெருமை அமரர் செ. சதாசிவக்குருக்கள் அவர்களையே சாரும். இவரே முதலாவது உற்சவத் தேரைக் கட்டுத தேராக அமைத்து உயிருள்ள யானையைக் கொண்டு தேரை நகர்த்தி பின் அடியார்கள் வடம் தொட்டு இழுக்கவும் செய்தார். இவரது பணி 10-3-91 இல் நிறைவுபெற்றது.

தொடர்ந்து ஆலயம் மேலும் வளர்ச்சியடைந்து வரும் நாளில் ஆலயத்திற்கு ஒரு புதிய சித்திரத்தேர் செய்ய வேண்டும் என உபயகாரர்களும் நாயன்மார்கட்டு வாழ் மக்களும் உள்ளத்தில் விரும்பினார்கள். பெருமான் கருணை புரிந்தார். சென்ற ஆண்டு (1994இல்) மகோற்சவ தேர்த்திருவிழாவின் போது 'சிற்பச்சக்கரவர்த்தி' ஆ சீவரத்தினம் ஆச்சாரியரை அழைத்து ஆலய முன்றிலில் காளாஞ்சி கொடுத்து தேர்த்திருப்பணியை ஆரம்பித்து வைத்தோம். பெருமானின் கருணை வெளிப்பட்டது தேர்த்திருப்பணி மிகவும் துரிதமாக நடைபெற்றது.

இவ்வூர்மக்கள் தம் மனம் உவந்து பணம் பொருள் என பனதந்து உதவி செய்தார்கள். அயலூர்மக்களும் இதே போன்று உதவி புரிந்தார்கள். வெளிநாடுகளில் வதியும் எமது ஊர்மக்கள் தாங்களாகவே பணத்தைத் திரட்டி எமக்கு அனுப்பினார்கள். சிற்பாசாரியார் உள்ளத்தில் விநாயகர் குடி கொண்டார். தனக்குத் தேவையான தேரை எப்படி அமைக்கவேண்டுமோ அப்படியே புதுமையும் அழகும் சிற்பசாத்திர முறையும் பிசகாமல் உருவாக்கப்பட விநாயகர் ஆசாரியார் மனத்தை இயக்கினார்.

இன்று 27—03—1995 திங்கட்கிழமை மாலை 3-30 மணிக்கு விநாயகப் பெருமானின் வீதியிலே சிற்பச்சக்கரவர்த்தி திரு. ஆ சீவரத்தினம் அவர்களின் தலைமையில் அவரது உதவியாளர்களினால் இந்தப் புதிய சித்திரத்தேரின் வெள்ளோட்டம் இனிது நடைபெறுகிறது.

நினைத்த காரியத்தை இடையூறின்றி நடத்தி வைப்பவர் விக்னேஸ்வரர். ஒரு வருடகாலத்திற்குள் இப் பெரும் தேர்த்திருப்பணி நிறைவு பெற்றுள்ளது. இது குளத்தடியானின் அற்புதம் அன்றோ! மெய்யன்பர்களே! எமதடன் பணிசெய்து கிடப்பதே. மேலும் ஆலயத்தில் திருப்பணிகள் செய்யக்காத்திருக்கின்றோம். தங்கள் காணிக்கைகளை மனமுவந்து வழங்குங்கள் பெருமான் எல்லா நலன்களையும் தந்து கருணை அள்ளி வழங்குவார்!

### பொருளாதார---,
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முற்றாக நீக்குவது குறித்தும், சில பொருள்களை எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகளை விலக்குவது குறித்தும் அரசு தீவிரமாகப் பரிசீலிக்கின்றது — என்றும் சந்திரிகா குறிப்பிட்டார். [உ]

### பரந்துபட்ட..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடாகவும் இருக்கிறது.

பொருளாதாரத் தடை நீக்கப்படும் பட்சத்தில் வடபகுதியில் பல்வேறு கஷ்டங்களும் நீங்கும். இதன் மூலம் அரசியல் பேச்சுக்களில் ஈடுபடக்கூடிய சூழ்நிலையும் தோற்றம் கொள்ளும என்பதும் அவர்களது நிலைப்பாடாக இருக்கிறது.

பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டுமென புலிகள் வற்புறுத்துகிறார்கள், ஆனால் பரந்துபட்டதொரு பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் பட்சத்தில் இவ்விடயம் பெரிய நெருக்கடியாக இருக்குமென நான் கருதவில்லை-இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ 7)

### தீர்வு..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டாது இந்த விடயத்தில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்

இது சிங்கள பௌத்த நாடு. கொலை செய்யாதீர்கள். மகிழ்ச்சிகரமாக — சமாதானமாக எம்மை வாழவிடுங்கள். ஈழப் பிரிவினைவாதிகள் தமது ''படங்களை'' சுழற்றிப் பைக்குள் போட்டுக் கொள்ள வேண்டும்.

பௌத்த மதத்திற்கு ஊறு ஏற்பட்டால் நாடே அழிந்து போய்விடும். மதத்தையும் நாட்டையும் பாதுகாப்பதற்கு பௌத்த பிக்குகள் களத்தில் குதிக்க வேண்டும்.

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். [உ]

### பிரபாகரன்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யம் குறித்து சந்திரிகாவுடன் பேசியதாக சொல்லப் படுகிறது.

இதற்கிடையே பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பது குறித்து நரசிம்மராவ் சந்திரிகாவுடன் பேச வேண்டும் என தமிழ் நாட்டின் இந்திரா காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் நரசிம்மராவுக்கு கடிதம் ஒன்று எழுதியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

### மூடப்பட்டிருக்கும்

ஆனைக்கோட்டையில் இயங்கும் நந்தவனம் அலுவலகமும், வெளிநாட்டில் இருந்து வந்தவர்களுக்கு மீள பயண அனுமதி அட்டை வழங்கும் செயலகமும் இன்று திங்கட்கிழமை மூடப்பட்டிருக்கும் என்பதை விடுதலைப் புலிகளின் அனைத்துலகத் தொடர்பகத்தினர் அறியத் தருகின்றனர். (ஐ)

### பல்லாயிரம---
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தது.

இதனையும் விட கூடிய தொகை லங்கா சிமெந்து நிறுவனத்தில் சேமிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது

இந்தக் கிளிங்கருடன் நான்கு வீதம் ஜிப்சம் சேர்த்து சிமெந்து உற்பத்தி செய்யப்படுவது தெரிந்ததே.

தொழிற்சாலைகளில் உள்ள கிளிங்கரை அங்கிருந்து ஏற்றி, காங்கேசன் துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பல் வரை ஏற்றிச் செல்வதற்கு குறிப்பிட்ட எண்ணிக்கையான லொறிகள் கப்பல் மூலம் காங்கேசனுக்கு தருவிக்கப்பட்டுள்ளதாகவும்—

லொறி மூலம் கிளிங்கரை ஏற்றி இறக்கும் ஒப்பந்தத்தை தமிழர் ஒருவரே பெற்றிருப்பதாகவும் —

தென்பகுதியிலிருந்து சிங்கள தொழிலாளர்களைக் கூட்டிவந்து இந்த வேலையை அவரே செய்விப்பதாகவும் — மேலும் தெரியவந்தது

இந்த வேலையைத் துரிதமாக நிறைவேற்றுவதற்கு வசதியாக,காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலைகளில் முக்கிய பொறுப்புக்களில் பணியாற்றிய சிலரை, இடமாற்றம் என்ற பெயரில் கொழும்புக்கு அல்லது புத்தளம் சிமெந்துத் தொழிற்சாலைக்கு அழைத்து அங்கிருந்து பின்னர் காங்கேசன்துறைக்கு பணி நடவடிக்கையாக நிர்வாகம் அனுப்பி வைப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசன் தொழிற்சாலைகளில் இருக்கும் கிளிங்கர் முழுவதையும் காலியில் உள்ள ''றுகுணு'' சிமெந்துத் தொழிற்சாலைக்கு எடுத்துச் சென்றால் —

அது அங்கு நான்கு வருடங்களுக்கு இடைவிடாது சிமெந்து தயாரிக்க போதுமானதாக இருக்கும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன (உ)

### பொத்துவிலில்---
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி

திடீரென இரும்புத் துண்டுகள், போத்தல்கள் என்பவற்றை மீனவர்களைநோக்கி வீச ஆரம்பித்தனர்; அத்துடன் மீனவர்களையும் தாக்கினர்.

பின்னர் தமது படகினால், மீனவர்களின் படகுகளை பலமுறைமோதி அவற்றை கடலினுள் மூழ்கடிக்க முயன்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட படகு தாய்வான் நாட்டுப்படகு என்றும் கூறப்படுகிறது.

# 7 ஐரோப்பிய நாடுகளிடையே விசா நடைமுறை தளர்வு

ஏழு ஐரோப்பிய நாடுகள் சேர்ந்து ஒரு பொதுவான விசா முறை ஒன்றை நேற்று முதல் நடைமுறைக்கு கொண்டு வந்திருப்பதை அடுத்து —

இலங்கை உட்பட உலக நாடுகளின் பிரசைகள் மேற்படி ஏழு நாடுகளிலும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு எல்லைப் புறக் கட்டுப் பாடின்றி பயணங்களை மேற்கொள்ளக் கூடிய நிலை உருவாகியிருக்கிறது.

பிரான்ஸ், ஜேர்மனி, லக்ஸம்பேர்க், நெதர்லாந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் பெல்ஜியம் ஆகிய ஏழு ஐரோப்பிய நாடுகளே தமக்கிடையே பொது விசா முறைறையைக் கொண்டு வந்திருக்கின்றன.

புதிய நடைமுறையின் கீழ்—

இந்த ஏழு நாடுகளுக்கு மிடையில் எல்லைப் புறக்கட்டுப்பாடு ஏதுமின்றி சுமுகமான முறையில் மக்கள் பயணம் செய்யமுடியும்.

### பங்குனி பொங்கல்

ஆனைப்பந்தி நாவலர் ஒழுங்கையில் உள்ள ஞான வைரவர் கோவிலில் பங்குனிப் பொங்கல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை நடைபெறும். [ஐ]

### லங்கா முடிதா வரும்

ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களுடன் 'லங்கா முடிதா' கப்பல் இரண்டொரு தினங்களில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறதுய

## ஜெனரேற்றர் இயக்குநர்

மின்பிறப்பாக்கி (ஜெனரேற்றர்) இயக்குவதில் அனுபவம் உடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எந்தவகை மின்பிறப்பாக்கியை இயக்குவதில் அனுபவம் உண்டு என்ற விவரத்துடன் விண்ணப்பிக்கவும்.

30 வயதுக்கு மேற்பட்டவர்களும், யாழ்.மாநகர சபை பகுதிக்குள் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது.

**விண்ணப்ப முடிவு திகதி : 31 - 3 - 95**

ஆளணி முகாமையாளர்
உதயன் வெளியீட்டகம்,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## யாழ். றோட்டறிக் கழகத்தின்

**54 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி**
நடத்தப்படும்

## மாபெரும் அஞ்சலோட்ட நிகழ்வு
## RELAY CARNIVAL

எதிர்வரும் ஏப்ரல் 8, 9 ஆம் திகதிகளில்
யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்
பாடசாலை மாணவ / மாணவியருக்கு:
19 வயதின் கீழ்
17 வயதின் கீழ்
15 வயதின் கீழ்
மற்றம்
கழக வீரர்கள்,
வீராங்கனைகளுக்கு

மேலதிக விவரங்களைப் பெற:
செயலாளர்
யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்,
292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தலைவர்.
யாழ். றோட்டறிக் கழகம்.
(சி-827)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
### யாழ். மாவட்டம்

## விசேட பொதுக்கூட்டம்

இடம்: புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம்
எழிலகம் முன்பாக,
யாழ்ப்பாணம்.

காலம்: **29 - 03 - 95** புதன்
பிற்பகல் 4 மணி

விடயம்:
1) அன்னை பூபதி நினைவுநாள் விழா தொடர்பான கலந்துரையாடல்.
2) ஒன்றிய செயற்பாடுகளில் ஒத்துழைக்காத நிறுவனங்கள் மீதான நடவடிக்கைகளை அறிவித்தல்.
3) மீள் பதிவு செய்யாது இயங்கும் நிறுவனங்கள் பற்றிய இறுதி முடிவை தெரிவித்தல்

யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் கலந்து கொள்ளவுள்ளார். அனைத்து அங்கத்தவர்களும் தவறாது கலந்து கொண்டு ஏற்படவிருக்கும் வீண் சிரமங்களை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

சகல கோட்டங்களினதும் நிர்வாகசபை உறுப்பினர்கள் ஏழு (7) பேரும் அன்றைய தினம் பி.ப. 3-00 மணிக்கு தவறாது சமூகம் தரவும்.

பொதுச் செயலாளர்
யாழ். மாவட்டம்
(சி-847)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org